Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, OCTOBER 30, 2021

சனிக்கிழமை, 30 ஒக்டோபர் 2021 | ஒளி: 07 கதிர் 140 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★




உர விவகாரம் உக்கிரமடைந்தது

# சீனாவின் கறுப்பு பட்டியலுக்குள் மக்கள் வங்கி சேர்ப்பு

உடன்படிக்கையை மீறி கடன் ஆவணத்துக்கு உரிய கொடுப்பனவை செலுத்தாமைக் காரணமாகவே, மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலுக்குள் இணைத்ததாக, இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக அலுவலகப் பிரிவால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த தீர்மானத்துக்கு அமைய, இலங்கையுடன் முன்னெடுக்கப்படும் சர்வதேச கொடுக்கல் வாங்களின் போது, மக்கள் வங்கியால் வெளியிடப்படும் கடன் ஆவணங்களை ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்குமாறும் ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்குமாறும் சகல சீன நிறுவனங்களுக்கும் அறிவுறுத்துவதாக சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

உரம் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இருதரப்புக்குமிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய, மிக அண்மையில் திறக்கப்பட்ட கடன் ஆவணம் சம்பந்தமான கொடுப்பனவை செலுத்துமாறு சீனாவின் சிந்தாவோ ஸ்விங் பயோடெக் நிறுவனம், மக்கள் வங்கியிடம் கோரிக்கை விடுத்ததாக தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## இஸட் ஸ்கோர் வெளியானது




2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சைக்கு தொற்றிய பரீட்சார்த்திகளுக்கான இஸட் ஸ்கோர் வெளியானது. அதனை கீழ்கண்ட வழிமுறைகளை அனுகுவதன் ஊடாக பார்வையிடலாம் என இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. http://admission.ugc.ac.lk அல்லது http://ugc.ac.lk இன்றேல் குறுந்தகவல் SMS to 1919

- Format: ugc <space> Index Number -> send to 1919
- 1Example: ugc 2223322 ->send to 1919

## நாளை சோக தினம்



இறையடி எய்திய வெலிமிட்டியாவே ஶ்ரீ குசலதம்ம மகாநாயக்க தேரரின் இறுதிக் கிரியைகள் நாளை 31 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன. அன்றைய தினத்தை சோக தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள அனைத்து மதுபானசாலைகளையும் நாளையதினம் மூடுமாறு கலால் வரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## நீதிமன்ற தடையுத்தரவால் தற்காலிகமாக இடைநிறுத்தம்

### மக்கள் வங்கி விளக்க அறிக்கை



மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இணைத்ததாக சீனத்தூதரகம் வெளியிட்டுள்ள தகவலை மையப்படுத்தி, ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் தொடர்பில் மக்கள் வங்கி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மக்கள் வங்கியால் வெளியிடப்பட்டுள்ள கடன் ஆவணக் கடிதத்துக்காக செலுத்தப்படும் கொடுப்பனவை செலுத்தாமைக் காரணமாக, இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஆலோசகரால் மக்கள் வங்கி கறுப்புப் பட்டியலில் இணைத்து க்கொள்ளப்பட்டுள்ளதாக எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.


, குறித்த வர்த்தக கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றத்தின் உத்தரவுக்கமையவே குறித்த கடன் ஆவணத்துக்கான கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சீன தூதரகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த கொடுப்பனவு தாமதத்துக்கான ஒரே காரணம் பொறுப்புமிக்க நிறுவமொன்றின் பிரஜை என்ற ரீதியில், இலங்கையின் நீதிமன்ற உத்தரவுக்கமைய செயற்பட மக்கள் வங்கி கடமைப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தவிசாளர் பதவி விவகாரம்

## புதியவரை நியமிக்க தடையுத்தரவு



ஶ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து ராஜா கொல்லுரேயை நீக்கி, புதிய ஒருவரை நியமிப்பதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நேற்று (29) தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

காணாமல் போய் ஒன்றரை மாதம்:

## பொலிஸ் அதிகாரியின் சடலம் நீர்த்தாங்கியில் இருந்து மீட்பு



**நவி**

ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் காணாமல் போன பொலிஸ் அதிகாரியான எஸ். இளங்கோவன், கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு நீர்வழங்கும் சுமார் 40 அடி உயரமான நீர்த்தாங்கியில் இருந்து சடலமாக நேற்று (29) மீட்கப்பட்டார்.

பூண்டுலோயாவை வசிப்பிடமாகக் கொண்ட இவர், கொத்மலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினார். இந்நிலையில், நெஞ்சுவலி காரணமாக செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதியன்று

தொடர்ச்சி P2



ஆயிரக்கணக்கானோரை


## அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் குவிப்போம்

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் விலையேற்றங்களைக் கண்டித்து, ஐக்கிய மக்கள் சக்தி, கண்டியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (29) முன்னெடுத்திருந்தது. எதிர்க்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எம்.

தொடர்ச்சி P2

மாகாணங்களுக்கு இடையிலான

## பயணக் கட்டுப்பாடு நாளை காலை நீக்கம்



க.பொ.த சாதாரண தரம்/ உயர் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தீர்மானம்.

பொது இடங்களுக்குச் செல்ல தடுப்பூசி அட்டை தேவை.

தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் வசம்.

தொடர்ச்சி P2

## சிங்கள குடியேற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

க. அகரன்அ



னுராதபுர மாவட்டத்தின் வடக்கு பகுதியை சேர்ந்த சிங்கள மக்கள் வாழும் கிராமங்கள் சிலவற்றை வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவுடன் எல்லை நிர்ணயத்தின் ஊடாக இணைக்க மேற்கொள்ளப்படும் செயற்பாட்டை கண்டித்து வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நேற்று (29) இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் கஜேந்திரகுமார்

தொடர்ச்சி P2

## Facebook பெயர் மாறியது



சமூக வலைதளங்களில் உலகின் முன்னணி நிறுவனமாக பேஸ்புக் இருக்கிறது. உலகம் முழுக்க கோடிக்கணக்கானோர் பேஸ்புக் தளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக உலகம் முழுவதும் பேஸ்புக் மற்றும் அந்நிறுவன சேவைகள் சில வாரங்களுக்கு முன்னர் முடங்கின. இதனால் பேஸ்புக்கின் பெயரை மாற்ற அதன் தலைமை செயல் அதிகாரி மார்க் ஜூக்கர்பர்க் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது.

தொடர்ச்சி P2

## தமிழர்களையும் இணைக்க ஜனாதிபதி உறுதிசெய்தார்

### செந்தில் தொண்டமான் ஊடகப் பிரிவு அறிக்கை



ஸ்தாபிக்கப்பட்டுள்ள 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணி நிலையில் தமிழர் சார்ந்து எவரும் நியமிக்கப்படவில்லை. இதுதொடர்பில் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தன.

இந்நிலையில், அலரிமாளிகையில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற ஆளுங்கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர்,

தொடர்ச்சி P2







உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## பாதிக்கப்பட் மக்களுக்கான பொறுப்பை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றுவோம்

### கொட்டாஞ்சேனை புனித லுசியா பேராலயத்தில் பிரதமர் தெரிவித்தார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயமாக நிறைவேற்றுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று முன்தினம் (28) பிற்பகல் கொட்டாஞ்சேனை புனித லுசியா பேராலயத்தில் வைத்து குறிப்பிட்டார்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகளை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் இணைந்து கொண்டிருந்த போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான குடியிருப்பில் 19 பயனாளிகளுக்கு இவ்வாறு வீடுகள் கையளிக்கப்பட்டன.

வாடகை அடிப்படையிலும் குறைந்த வருமானம் பெறுவோர் என்ற அடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்ட 33 பயனாளி குடும்பங்களுக்கு இவ்வாறு புதிய வீடுகள் கையளிக்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு வீடுகளினதும் மதிப்பு 4 மில்லியன் ரூபாயாகும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீனாவின் கறுப்பு பட்டியலுக்குள் மக்கள் வங்கி சேர்ப்பு

வர்த்தக விதிகள் மற்றும் சர்வதேச வர்த்தக கொள்கைகளுக்கு அமைய, மக்கள் வங்கி செயற்படாமையால் இந்த கடன் ஆவணத்துக்குரிய கொடுப்பனவை செலுத்தாமை காரணமாக, குறித்த சீன நிறுவனம் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

எனினும், வேறு சீன நிறுவனம் அனுப்பிய இரண்டு உர மாதிரிகளில் தீங்கு விளைவிக்கும் பக்றீரியா இருப்பதன் காரணமாக உரத்தொகை இறக்குமதியை இலங்கை நிறுத்தியுள்ளது.

அதனுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் உர நிறுவனங்கள் இரண்டு, கொழும்பு வர்த்தக மேலநீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய சம்பந்தப்பட்ட சீன நிறுவனத்துக்கு கடன் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை செலுத்துவதைத் தடுக்குமாறு, தற்போது இடைக்கால தடையுத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்ற தடையுத்தரவால் தற்காலிகமாக இடைநிறுத்தம்

தற்போது செயற்பாட்டிலுள்ள தடை நீக்கப்பட்டதன் பின்னர், சாதாரண வர்த்தக கொள்கைக்கு அமைய கடன் ஆவணக் கொடுப்பனவு செலுத்தப்படும் என மக்கள் வங்கி அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

# பொலிஸ் அதிகாரியின் சடலம் நீர்த்தாங்கியில் இருந்து மீட்பு

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், மறுநாள் காணாமற் போயுள்ளார். அன்றிலிருந்து நேற்று வரையிலும் அவரது மனைவி உட்பட உறவினர்கள் தேடிக்கொண்டே இருந்துள்ளனர்.

இந்நிலையில், கம்பளை ஆதார வைத்தியசாலையின் வாட்டுகளுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் ஒருவகையான மனம் வீசுவதாக நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, நீர்த்தாங்கியில் சடலமொன்று மிதப்பது கண்டறியப்பட்டது.

நீதிவானின் விசாரணையின் பின்னர் சடலம் மீட்கப்பட்டது. அந்த சடலம் காணாமல் போன பொலிஸ் அதிகாரி எஸ். இளகோவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# Facebook பெயர் மாறியது

இந்நிலையில், பேஸ்புக் நிறுவனத்தின் வருடாந்த இணைப்பு மாநாடு நேற்று (29) நடைபெற்றது. அங்கு உரையாற்றிய பேசிய மார்க் ஜுக்கர்பர்க் பேஸ்புக் நிறுவனத்தின் பெயரை மெட்டா (META) என மாற்றி உள்ளதாக அறிவித்தார்.

சமூக பிரச்சினைகளுடன் போராடி நிறைய கற்றுக் கொண்டோம். கற்றுக் கொண்ட அனைத்தையும் கொண்டு புதிய அத்தியாயத்தை உருவாக்க வேண்டிய நேரமிது என தெரிவித்தார். அதே சமயம் தங்கள் ஆப்களும், அவற்றின் பிராண்டுகளும் மாறவில்லை என்றார்.

# பாதிக்கப்பட் மக்களுக்கான பொறுப்பை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றுவோம்

அருட்தந்தை ஜே.டீ. அந்தனி ஆண்டகை மற்றும் அருட்தந்தை அன்டன் ரஞ்சித் ஆண்டகை, நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடந்து உரையாற்றிய பிரதமர்,

குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். நம்மால் தாமதிக்கப்பட்டிருப்பினும், அம்மக்களுக்கான பொறுப்பை நிச்சயமாக நிறைவேற்ற நாம் தயார்.

ஏனெனில் அவர்கள் எத்தகைய நிலையில் காணப்படுவார்கள் என்பதை நாம் அறிவோம். இதேவேளை, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மக்களுக்கு நிம்மதியாய் வாழவும் சுதந்திரமாக பயணிக்கவும், மத தத்தை பின்பற்றவும் கோவிலுக்கு, பள்ளிக்கு, விஹாரைக்கு சென்று வருவதற்கான உரிமை இருக்க வேண்டும் என்றார்.

அந்த உரிமையை பாதுகாப்பது போன்றே மத சுதந்திரத்தை அனுபவிக்க, அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் மதத்தை பின்பற்ற அனுமதிக்க வேண்டும். அவ்வாறாயின் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதனை எமது கடமையாக நாம் கருதுகின்றோம். அதனால் இம்மக்களுக்காக எமது கடமையை நிறைவேற்றுவதற்கு போன்றே இதில் கலந்து கொள்ள கிடைத்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களை சந்திக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர் நினைவுபடுத்தும் ஒரு விடயம், அன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். எம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்பதை நான் மிகத் தெளிவாக கூற விரும்புகிறேன்.

அதேபோன்று அவ்வாறானதொரு நிலைமை எதிர்காலத்தில் நிகழாதிருப்பதனை உறுதிசெய்வது எமது பொறுப்பாகும். அதற்காக நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். அரசாங்கத்தனை பொறுப்பேற்றவுடன் வீடற்றவர்களுக்கு வீடுகளை பெற்றுக் கொடுப்பதும் எமது கடமையாகும். அதனால் அந்த பயனாளிகளுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தையும் நாம் செயற்படுத்துவோம் என்பதை நினைவுபடுத்துகிறேன் என்றார்.



# புதியவரை நியமிக்க தடையுத்தரவு

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளராக செயற்பட்ட வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே, உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவியிலிருந்து ஒக்டோபர் 24ஆம் திகதியன்று நீக்கப்பட்டார்.

கட்சித் தலைமையகத்தில் அன்றையதினம் (24) நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் அரசியல் குழுவினால் கொண்டுவரப்பட்ட யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கமைய, ராஜா கொல்லுரே தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்நிலையில், கட்சியின் பதில் தவிசாளராக பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் உப தலைவருமான வீரசுமண வீரசிங்கவை நியமிக்க இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு அன்றையதினம் தீர்மானித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் குவிப்போம்

பிக்கள் குழு, கண்டிய அஸ்கிரிய மாநாயக்கரை முதலில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டது.

அச்சந்திப்பின் போது, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நாட்டுக்கு விரோதமான செயற்பாடுகள் மற்றும் மக்கள் மீது சுமத்தப்படும் விலை அதிகரிப்புகள் குறித்து தெளிவுப்படுத்தினர். நாட்டில் விவசாய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல தற்போதைய பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்பின்னரே கண்டி நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்களை விரைவில் கொழும்புக்கு அழைத்து வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவேன் என எச்சரித்துள்ளார். இதில், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ஹலீம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களும் எழுப்பப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டி நகரத்தில் சில மணிநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# தமிழர்களையும் இணைக்க ஜனாதிபதி உறுதிசெய்தார்

**கலகொட அத்தே ஞானசார தலைமையிலான "ஒரே நாடு– ஒரே சட்டம்" என்பதற்கான ஜனாதிபதி செயலணி 13 உறுப்பினர்களை கொண்டது. அதில், ஒன்பது பேர் சிங்களவர்கள் ஆவர். ஏனைய நால்வரும் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**

அந்த செயலணியில் தமிழ் உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

இந்த கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி தமிழ் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி விரிவாக்கம் செய்வதாக உறுதியளித்துள்ளார் என செந்தில் தொண்டமானின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதியன்று வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஸ்தாபிக்கப்பட்ட கலகொட அத்தே ஞானசார தலைமையிலான "ஒரே நாடு- ஒரே சட்டம்" என்பதற்கான ஜனாதிபதி செயலணி 13 உறுப்பினர்களை கொண்டது. அதில், ஒன்பது பேர் சிங்களவர்கள் ஆவர். ஏனைய நால்வரும் முஸ்லிம்கள்.

# சிங்கள குடியேற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

பொன்னம்பலம் உட்பட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள், வவுனியாவில் போராட்டத்தில் இடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பழைய பேருந்து நிலையத்தினை சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் உட்பட குழுவினர் சிங்கள குடியேற்றங்கள் மற்றும் அதனால் ஏற்படபோகும் பாதிப்புக்கள் தொடர்பில் மக்களை தெளிவுப்படுத்தும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்திருந்தனர்

குறித்த ஆர்ப்பாட்டத்தில், "அடங்க மறுப்பது எம்மினத்தின் குணம்", "எமது நிலத்தில் எம்மை நிம்மதியாக வாழ விடு", "சீண்டாதே சீண்டாதே தமிழர்களை சீண்டாதே", "இலங்கை அரசை குற்றவியல் நீதிமன்றத்தில் உடன் பாரப்படுத்து", "மீண்டுமோர் இனவழிப்பு அரங்கேற்றமா", "தமிழர் தாயகத்து நிலங்களை அபகரிப்பதை நிறுத்து" போன்ற பதாதைகளை தாங்கியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர்.

# பயணக் கட்டுப்பாடு நாளை காலை நீக்கம்

சுற்றுலாத்துறையை மையப்படுத்தி பல தீர்மானங்கள்.

தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் பொதுமக்களை அச்சத்துக்குள்ளாக்கும் ஒருங்கிணைந்த குழுக்கள் தொடர்பில் கண்டறியுமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை.

தற்போது நாட்டில் நடைமுறையில் காணப்படும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை, நாளை (31) அதிகாலை 4. மணிக்கு நீக்கத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ், பொதுமக்களின் வாழ்க்கை முறைமை பாதிக்காத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (29) முற்பகல் இடம்பெற்ற கொவிட்-19 தொற்றொழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பில் அவதானம் செலுத்தி, கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தரம் ஆகியவற்றின் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதாரப் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ள என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில், பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி, கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, ஜனாதிபதி பணித்தார்.

அத்துடன், பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விரைவில் ஆராயுமாறும், சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் இடங்களுக்குச் செல்லும் போது, தடுப்பூசி அட்டையைக் கட்டாயம் எடுத்துச் செல்வதற்கான இயலுமை தொடர்பில் உடன் கண்டறியவும், இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க, கொரோனா சட்டதிட்டங்களில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதென்று சுட்டிக்காட்டிய சுகாதார அதிகாரிகள், இது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலின் முன்னேற்றம் தொடர்பிலும், ஜனாதிபதி இதன்போது ஆராய்ந்தறிந்தார்.

கொவிட் மரணங்களின் வீதம் மற்றும் தொற்றுக்கு உள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள, தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அத்துடன், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்துக்கு நடமாடும் சேவையை முன்னெடுக்குமாறும் அனைத்து மக்களும் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இதற்காக, பொதுச் சுகாதார அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் மற்றும் பிராந்திய அரசியல்வாதிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் சில குழுவினர் முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரங்கள் தொடர்பிலும், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களால் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டது. தடுப்பூசி தொடர்பில் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கும் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட குழுக்கள் தொடர்பில் உடன் கண்டறியுமாறு, பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தற்போதைய தொற்றுப் பரவல் நிலைமையைக் கட்டுப்படுத்தி, நாட்டை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டத்தில், மாகாண மற்றும் மாவட்டச் சுகாதாரப் பணிப்பாளர்கள் அதிக பொறுப்புகளை ஏற்க வேண்டுமென்றும் எடுத்துரைத்த ஜனாதிபதி, அனைத்துத் துறைகளையும் தொடர்புபடுத்திக்கொண்டு, கொவிட் ஒழிப்பு வேலைத்திட்டத்தை மேலும் வெற்றிகரமாக்கிக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் சவாலுக்கு இலக்காகியுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் முக்கிய துறையாக சுற்றுலாத்துறை அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பான பல புதிய தீர்மானங்களுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்று, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதன்போது தெரிவித்தார்.

சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகள் பிரகாரம், சுற்றுலாத்துறையை மேம்படுத்த, அதிக அக்கறையுடன் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டுமென்று, ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இலங்கையில் நடத்தப்படவுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக, வெளிநாட்டு இரசிகர்கள் வருவதற்கான வாய்ப்பளித்தல் தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது. அவர்களை உயிர்க் குமிழிக்குள் வைத்திருந்து, தேவையான வசதிகளை வழங்க முடியுமென்று, சுகாதாரத் துறையினர் எடுத்துரைத்தனர்.

எதிர்வரும் காலங்களில் நாட்டுக்குள் நடத்தப்படவுள்ள லங்கா பிரிமியர் லீக் (LPL) போட்டிகள் உள்ளிட்ட மேலும் பல போட்டிகளைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு, உள்நாட்டு, வெளிநாட்டு போட்டி ஒருங்கிணைப்பாளர்களால் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவை, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் அந்நியச் செலாவணியை அதிகரித்துக்கொள்ளக் கிடைத்துள்ள விசேட வாய்ப்புகள் என்றும், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எடுத்துரைத்தார்.

பண்ணைத் தொழில்

# பலபடிகள் மேல்





பாலகிருஸ்ணன் சிவரஞ்சன்

“படிக்காமல் மாடு மேய்க்கப் போறியே” என, பாடசாலை நாள்களில், எங்களை ஆசிரியர்களும் பெற்றோரும் உற்றாரும் அவ்வப்போது அன்பாகவும் இறுக்கமாகவும் கண்டித்த சம்பவங்கள், எங்கள் எல்லோருக்கும் நிறையவே உள்ளன.

எங்கே எம் பிள்ளைகள் படிக்காது இருந்தால், பிழையான வழியில் சென்று விடுவார்கள்; அதனால் எதிர்காலத்தில் துன்பப்பட்டுவார்கள் என்ற ஏக்கத்திலும் ஆதங்கத்திலும், அவர்கள் அவ்வாறு ஏ(பே)சியிருப்பார்கள்; அதனை விடுவோம்.

ஆனாலும், அங்கே மறைமுகமாக அல்லது உட்கிடையான கருத்து ஒன்று, மறைந்து நிற்கின்றது. அதாவது, மாடு மேய்ப்பது இரண்டாம் தரத் தொழிலாகவே பார்க்கப்பட்டுள்ளது. அந்தத் தொழிலைச் செய்வதை, ஒருபடி கீழே வைத்தே நோக்கப்பட்டுள்ளது என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால், இன்று நிலைமை தலைகீழாகவே மாறி விட்டது எனலாம். ஒருங்கிணைந்த பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள் என்ற பெயர்களில் கால்நடைகள், பறவைகள், மீன்கள் எனப் பல்வேறு தொழில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதனது உற்பத்தி, வியாபார சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில், நம் இளம் சந்ததி உயிர்ப்புடன் தொழிற்படுகின்றது.

அன்று, இவ்வாறான பண்ணைகளை ஓரளவு படித்தவர்களே நடத்தி வந்தார்கள். ஆனால், இன்று இவற்றினது உரிமையாளர்கள், முகாமையாளர்கள் சாதாரன படிப்பு படித்தவர்கள் அல்ல.

மாறாக விஞ்ஞானமாணி, வணிகமாணி, முகாமைத்துவம், பொருளாதாரம் எனப் பல்கலைக்கழக இளமாணி, முதுமாணிப் பட்டம் வைத்திருக்கும் பட்டதாரிகளால் நடத்தப்பட்டு வருகின்ற பண்ணைகள் ஆகும்.

பட்டம் பெற்றவுடன், பட்டதாரி ஆகியதும் அரச வேலையைத் தேடும் இளையோர் மத்தியில், இவ்வாறான பண்ணையாளர்கள், பலருக்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதன் ஊடாக, அவர்களது வாழ்வுக்கும் ஒளியேற்றுகின்றார்கள்.

பண்ணை நடத்தும் பட்டதாரி, சிறிய இடத்தில் பண்ணை நடத்,தி அதிக லாபம் சம்பாதிக்கும் தம்பதிகள், குறைந்த முதலீட்டில் நிறைந்த லாபம் எனப் பல்வேறு தலைப்புகளில் பலரது பண்ணை வளர்ப்பு சொந்த அனுபவங்களை, ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களில் பரவலாகக் காணக் கூடியதாக உள்ளது.

மேலும், இன்றைய பண்ணைத் தொழிலும் பாரம்பரிய முறைகளிலிருந்து சற்று வேறுபட்டு, பல தொழில் நுட்பங்களையும் உத்திகளையும் புகுத்தி வெற்றி கண்டுள்ளது.

இதற்கு மேலாக, உரிமையாளர்(கள்) தனது இடத்திலிருந்து கொண்டு, பிறிதோர் இடத்திலிருக்கும் தனது பண்ணையை சிசிரிவி கமெராக்கள் உதவியுடன், தனது கையிலிருக்கும் அலைபேசி மூலம் கண்காணிக்கக் கூடிய பல வசதிகளை, இன்றைய நவீன தொழில்நுட்பம் வழங்கி உள்ளது.

அடுத்து பால், முட்டை என்பன புரதச்சத்து நிறைந்த உணவுகள் ஆகும். முக்கியமாக, சிறுவர்கள் அதிகமாகவும் கட்டாயமாகவும் தங்களது உணவில் சேர்க்க வேண்டியவைகள் ஆகும்.

எனவே, ‘உனக்கு முன்னால் உலகம் பரந்து விரிந்து கிடக்கிறது. எங்கே தொடங்கப் போகிறாய்; எவ்வாறு தொடரப் போகிறாய் என்பது உனது கையில் உள்ளது’ என்பது போல, “இங்கு (உள்நாட்டில்) உழைக்க முடியாது; அதனால் வெளிநாடு போகப் போகிறேன்” என்று கதைப்போருக்கு மத்தியிலும், வைத்தியத்துறை அல்லது பொறியியல் துறை கிடைக்காது விட்டால், அடுத்த கட்ட வாழ்வே இல்லை என்று புலம்புவோருக்கும் நடுவில், படித்து பட்டம் பெற்று, பண்ணைத் தொழில் முயற்சியில் தானும் வாழ்ந்து, தன் சமூகத்திற்கும் வாழ்வளிக்கும் முயற்சியாளர்கள் உயர்ந்தவர்களே.

அந்தவகையில், மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த கணேசமூர்த்தி பிரியந்தன் *Higher National Diploma in Civil Engineering* கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளார்.

அதனையடுத்து, மட்டக்களப்பிலுள்ள அரச திணைக்களமொன்றில் பொறியியல் உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டு, ஆட்டுப் பண்ணை வளர்ப்பிலும் சாதித்துக் கொண்டிருப்பது போல, மேலும் பல இளைஞர்களும் இத்துறையில் பிரகாசிப்பதுடன், ஏனையோர் வாழ்வும் பிரகாசிக்க உழைக்கலாம்; உழைக்க வேண்டும்.





# வலசை வரும் பறவைகள்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள சிறிய குளங்கள், தற்போது முற்றாக வற்றிய நிலையில் காணப்படுகின்றன. இந்நிலையில், வற்றிய குளங்களில் இரை தேடுவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டுப் பறவைகள் அதிகம் படையெடுப்பதைக் காணமுடிகின்றது.

வருகைதரும் வெளிநாட்டுப் பறவையினங்கள், அப்பகுதியிலுள்ள நம் நாட்டுக்கே உரித்தான கொக்கு, ஆள்காட்டி, கானாங்கோழி, நாரைக் கொக்கு, உள்ளிட்ட பறவையினங்களுடன் சேர்ந்து இரைதேடி வருவதையும், அவதானிக்க முடிகின்றது.

பல வர்ணங்களுடன் பார்ப்பதங்கு அழகாகக் காட்சி தரும் ஆயிரக்கணக்கான பறவைகளை, அப்பகுதி மக்களும் அதன் ரம்மியமான காட்சிகளையும் அழகையும் கண்டு இரசித்து வருகின்றனர்.

எனினும், இவ்வாறு இலங்கைக்கு வரும் பறவையினங்களைப் பாதுகாக்கவும், பேணவும் மனிதர்கள் தவறவிட்டார்கள் என, சூழலியலாளர்களர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பறவைகள் வெவ்வேறு மாவட்டங்களுக்கு இடம்பெயர்கின்றன. ஆனாலும், பூகோள ரீதியில் வட துருவத்திலிருந்துதான் அதிக பறவைகள் வருகின்றன. இதனை இடம்பெயரும் பறவைகள் என அழைப்பதில்லை. அதனை ‘வலசை வரும் பறவைகள்’ என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு பறவைகள் மாத்திரமல்ல வண்ணாதிப்பூச்சி, சிங்கறால், திமிங்கிலம், உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களும் வலசையாக இடம்பெயர்கின்றன. இது வருடாந்தம் ஆண்டாண்டு காலமாக இடம்பெற்று வருகின்றது.

இது, சூழல் வெப்பநிலைக்கு உள்ள பிராணிகளாகவும் இளஞ்சூட்டுக் குருதியுள்ள பிராணிகளாகவும் தங்களுடைய வெப்ப நிலையைத் தாங்களே உணரக்கூடியதாக உள்ளன.

வடதுருவத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் குளிர்குறைந்த காலத்தில் இவ்வாறான பறவைகள் அப்பகுதிக்குச் சென்று வாழ்கின்றன. ஏனைய பிராணிகளிலிருந்து தப்புவதற்காகவும் அதிக உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் சில நாடுகளில் 12 மணித்தியாலங்களுக்கு மேலாக சூரிய ஒளி கிடைக்கும். அதனைப் பெற்றுக் கொள்வதற்காகச் செல்கின்றன.

குளிர்த்தன்மையைச் சகித்துக் கொள்ளாது இமயமலை, சைபீரியா உள்ளிட்ட 3,000 தொடக்கம் 10,000 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து, இலங்கைக்கு வரும் பறவைகள் அதிகம் வருகின்றன.

இவ்வாறு வலசை வரும் பறவைகள், யாழ். குடா நாடு, மன்னார் வளைகுடா, உள்ளிட்ட தமிழர் பகுதிகளிலேயே அதிகம் தங்குகின்றன. இவ்வாறான பறவைகள் இரைபெற்றுக் கொள்வது ஒர்இடத்திலும், தங்குவதற்கு வேறோர் இடத்துக்குச் சென்றுவிடும். இவ்வாறான பறவைகள், இலங்கையின் தென் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்கும் செல்கின்றன.









ஒகஸ்ட் மாதத்தில்தான் இலங்கைக்கு இவ்வாறு வலசை வரும் பறவைகள் வரத்தொடங்கும். இது ஏப்ரல் மாதம் வரைக்கும் தங்கி நிற்கும். அதன் பின்னர் அவை மீளத் திரும்பிச் சென்றுவிடும். எனினும், சில பறவைகளுக்கு சுகவீனம் ஏற்படுமாயின் அவை மீண்டும் செல்லாது, இங்கேயே தங்கி விடுகின்றன.

வடக்கு, கிழக்கில் ஐப்பசி, மார்கழி மாதங்களில் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகி, பின்னர் ஏப்ரல் மாத்துக்குப் பின்னர் குளங்களிலுள்ள நீர் வற்றத் தொடங்கிவிடும். இந்த நிலையில் வற்றுகின்ற குளங்களில் உள்ள மீன்களை உண்பதற்கு உள்ளூரில் உள்ள பறவைகளுடன் வெளி நாடுகளிலிருந்து வலசை வரும் பறவைகளும் போட்டிபோட வேண்டி ஏற்படும்.

பறவைகள் இயற்கையாகவே கூட்டமாகத்தான் இரைகளை உண்ணும்; ஆனாலும் வலசை வரும் பறவைகளும், இங்குள்ள பல இன பறவைகளுடன் இணைந்து இரைகளை உண்ணுகின்றன. உணவும் போட்டியும் இருக்கும். ஆனாலும் வலசைவரும் பறவைகளால் சூழலுக்குப் பாதிப்புகள் இல்லை.

மனிதர்கள் திசைகாட்டியை வைத்து, திசைகளை அறிகின்றபோது, பறவைகளுக்கு இயற்கையாகவே திசைகளை அறிகின்ற திறனும், பாதையைக் கண்டுபிடிக்கின்ற தன்மையும் அமைந்துள்ளது. இது இயற்கையாகவே அதன் மூளைகளில் பதிந்துள்ளது. ஆதிகாலத்தில் முன்னோர்கள் பறவைகளை வைத்து தூது அனுப்பிய வரலாறுகளையும் நாம் அறிந்துள்ளோம்.

ஆனால், தற்போதைய நிலையில் பறவைகள் காலா காலமாக வந்து தங்கி நிற்கும் இடங்களை ஆக்கிரமிப்புகளும் காடு அழிப்புக்களும் பிளாஸ்ரிக் கழிவுகளை கொட்டுதல் போன்ற கொடுஞ்செயல்கள் இடம்பெற்று வருகின்றன. வலசை வரும் பறவைகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றால், ஒரு தடவை வந்தால் அடுத்த தடவை வராமலிருந்துவிடும்.

இலங்கையில் 15 சதவீதத்தினர் சுற்றுலாத்துறையினூடாகத்தான் வாழ்வதாக கொரோனோ வந்ததன் பிற்பாடு தெரிவிக்கின்றார்கள். சுற்றுலாத்துறையை இன்னும் மேம்படுத்துவதற்கு, இயற்கையாகவே பறவைகள் தங்கும் இடங்களை அழிக்காமல், பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. இதனை வடக்கு, கிழக்கில் இல்லாமலுள்ளன. இயற்கை குளங்களைப் பாதுகாக்க வேண்டும்.

இயற்கையாகவே பெய்யும் மழை நீரைச் சேமித்து வைப்பதற்காக வேண்டி கடந்த காலங்களில் மன்னர்களும், அரசர்களும் செய்தது போன்று சிறு சிறு குளங்களை அமைத்து அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டும். ஆனாலும் பல்தேசியக் கம்பனிகளின், பிளாஸ்ற்றிக் உற்பத்தி, தொழிற்சாலைகளின் கழிவுகள், சட்டவிரோத மதுசார உற்பத்தி, (ஒரு லீற்றர் மதுசார உற்பத்திக்கு 6 லீற்றர் தண்ணீர் தேவைப்படுகின்றது) அதன் கழிவுளையும் நீர் நிலைகளில் கொட்டுவதனாலும், பறவைகள் பாதிப்படைந்து பேரழிவுகளுக்கும் உட்படுகின்றன.

இவற்றான நிலையில் நமது பகுதிகளில் இருப்பவர்கள் தமது வீடுகளைப் பூட்டி வைத்துவிட்டு அதனை வாடகைக்கும் கொடுக்காமல் வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள். இந்நிலையில் காணி இல்லாதவர்களுக்கு பறவைகள் வாழும் இடங்களும் வழங்கப்படுகின்றன. புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் இங்குள்ள வீடுகளை வாடகைக்கு வழங்கினால்கூட இவ்வாறான நிலைமை ஏற்படாது.

முன்னரைவிட தற்போதைய நிலையில், இலங்கைக்கு வலசை வரும் பறவைகள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே, கழிவுகளை நீர் நிலைகளில் கொட்டுவது, காடழிப்பு, நீர் நிலைகளை ஆக்கிரமித்தல் உள்ளிட்ட பல விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால், மேலும் வலசை வரும் பறவைகளை அதிகரிக்கச் செய்வதோடு, சுற்றுலாத்துறையையும் மேம்படுத்தலாம். பறவைகள், பிராணிகள் தொடர்பிலான விளக்கங்களையும், தெளிவுகளையும் நம்மவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வரும் சுற்றுலாத் துறையினருக்கும் அது தொடர்பில் விளக்கமளிக்கலாம். இது தொடர்பில் இளைஞர் யுவதிகளும் முன்வந்தால் தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளலாம் என சூழலியலாளர்களின் ஆய்வுகளிலிருந்தும், செயற்பாடுகளிலிருந்தும் தெரியவருகின்றது. எனவே, வெளிநாடுகளிலிருந்து வலசைவரும் பறவைகளால் பல தொழில் வாய்ப்புகளையும் இயற்கை அழகுகளையும் சுற்றுலாத்துறை மேம்பாடுகளையும் ஏற்படுத்தலாம் எனத் தெரியவருகின்றது.

‘வந்தாரை வாழ வைக்கும்’ மண்ணுக்கு வரும் உயிரினங்கள் சுதந்திரமாக தங்கவும் அவை வாழும் உறைவிடங்களைப் பாதுகாக்கவும், சூழலியலாளர்களும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும் என பாடுபடுவோரும் அயராத முயற்சிகளையும் செயற்றிட்டங்களையும், அமல்ப்படுத்த வேண்டும் என்பதோடு, பறவைகள் தங்குவதற்கும், இரைதேடுவதற்குமாக யாரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தாத வண்ணம், இயற்கை வனப்புகளை அழிக்காமலும் பாதுகாத்துப் பேணுவதுவும், அனைவரினதும் தலையாய பொறுப்பும் கடமையுமாகும்.

# துய்யொனின் 'பிராயச்சித்தம்'



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா



'துய்யோன்' எனும் புனைபெயருடன் எழுதிவரும் கிழக்கின் புகழ்பூத்த எழுத்தாளரான அதிபர் எ.எச்.எ.பஷீரின் நான்காவது நூல் "பிராயச்சித்தம்" எனும் சிறுகதைத்தொகுப்பாகும்.

சாய்ந்தமருதைச்சேர்ந்த அதிபர் கலாபூசணம் ஜனாப் பஷீர், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் 26ஆண்டுகாலம் அதிபராகவிருந்தவர். பாளிகாவின் பொற்காலம் என வர்ணிக்கப்படுவதற்கு ஆணிவேராகத்திகழ்ந்தவர் பஷீர்.

அதிபராகவிருந்த பஷீர் கனதியான எழுத்தாளராக இருப்பது பலருக்குத் தெரியாது. அவர் விளம்பரத்தைவிரும்பாத அமைதியான சுபாவம் கொண்டவர்.

அவர் 'இதயதாகம்' எனும் நாவலையும் 'அவள் செத்துக்கொண்டு வாழ்கிறாள்'எனும் சிறுகதைத் தொகுதியையும் 'ஒரு பூ மீண்டும் மலர்கிறது' எனும் நவீனத்தையும் எழுத்துலகிற்குப்படைத்த பஷீர் தற்போது நான்காவது படைப்பாக பிராயச்சித்தத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்நூலை அவர் சமர்ப்பணம்செய்திருப்பது கிழக்கின் புகழ்பூத்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களுக்கு. தனது மதிப்பிற்குரிய ஆசானான சண்முகம் சிவலிங்கத்திற்கு இந்நூலை சமர்ப்பணம் செய்திருப்பதிலிருந்து அவரது குருபக்தி வெள்ளிடைமலையாகத் தெரிகிறது.

7சிறுகதைகளைக்கொண்டு 75பக்கங்களில் இத்தொகுப்பு வெளிவந்திருக்கிறது. பெரும்பாலானவை கல்விப்புலம் சார்ந்து காணப்படுகிறன்றன.இவைஅனைத்தும் வீரகேசரி, தினகரன், மித்திரன் மற்றும் தமிழ்மிரர் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை.

ஆசிரியர்பணி கல்வி அதிகாரி பாடசாலைக்கு வருகிறார் தண்டனைகள் தீர்வாவதில்லை பழி பிராயச்சித்தம் ஆதங்கம் நிறைவு ஆகிய ஏழு சிறுகதைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. இவற்றில் ஆசிரியப்பணி பிராயச்சித்தம் கல்விஅதிகாரி பாடசாலைக்கு வருகிறார் ஆகிய கல்விப்புலத்திலான கதைகள் எனக்கும் நிறையபிடித்திருந்தது.


'எழுத்துக்கு இறக்கைவைத்துப் பறத்தல்..' எனும் மகுடத்தில் தீரன் - ஆர்.எம். நௌசாட் ஆழமானதோர் அணிந்துரையை வழங்கியிருக்கிறார். அதுவொன்றே போதுமானது. அத்துணை சிறப்பாக பிராயச்சித்தத்தை துலக்கியிருக்கிறது.

அணிந்துரையில் 'துய்யோனின் எழுத்துக்களில் மகா ஆடம்பரங்கள் இல்லை.அதிக இழிந்த மொழிகளும் இல்லை. முடிந்தவரை ஒப்பனைகள் நீக்கிய மிகையுணர்ச்சி தவிர்த்த படிமங்கள் அற்ற எழுத்து துய்யோனுடையது.

ஒருபுழுவுக்கு சிங்காரமான இறக்கைகள் வைத்துப்பார்ப்பதில் அவர் சமரசம் கொள்ளவில்லை என்பது புரிகிறது. மற்றது அவர் தன் கதைகளைத்தேடி விண்வெளிக்குச்செல்லவில்லை. தன்னைச்சுற்றியுள்ள மேய்ச்சல் வெளியில் வேண்டியளவு மேய்ந்துவிட்டு ஆறுதலாக உட்கார்ந்து அசைபோட்டிருக்கிறார். அதற்காக இக் கதைசொல்லிய நாம் எவ்வளவும் பாராட்டலாம்.

அவரது கல்வியியல் நெறி அவரது எழுத்துக்களில் வியாபகமாகச் சூழ்ந்துகொண்டுள்ளதை இக்கதைகளின் ஊடே நம்மால் தரிசிக்கமுடிகிறது. 'என்று தீரன் அழகாகக்கூறியிருக்கிறார்.

எழுத்தாளர் பஷீர் இன்னும் நிறைய எழுதவேண்டுமென்பது எழுத்துலகின் அவா.




## மலையக சமூக மாற்றத்தில் மலையக ஆசிரியர்களின்

# வகிபங்கு அளப்பரியது

அ.லெட்சுமணன்,
(அமைப்பாளர், நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்)

**மலையக சமூக மாற்றத்தில் மலையக ஆசிரியர்களின் வகிபங்கு அளப்பரியது ஆகும். குறிப்பாக, கல்வியின் ஊடாக தேசிய ரீதியான விலாசத்தை ஏற்படுத்தித் தந்தவர்களாகவும், கலையின் ஊடாக சமூக மாற்றத்தினை ஏற்படுத்தித் தந்தவர்களாகவும் மலையக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள் என்றால் அது மிகையாகாது.**

நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் ஒக்டோபர் 8ஆம் திகதியன்று ஆசிரியர் தின நிகழ்வை நிகழ்த்தியது. அதில், பேராசிரியர் என்.கருணாநிதி தலைமையேற்று உரை நிகழ்த்தினார்.

அந்நிகழ்வில், கந்தலோயா தமிழ் வித்தியாலய அதிபர் எம். கருணாகரன் மலையக சமூகமாற்றத்தில் ஆசிரியர் வகிபாகம்.எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவ்விருவரின் உரைகளும் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

### பேராசிரியர் என். கருணாநிதி

பாடசாலை பிள்ளைகள், இளம் தலைமுறையினர் மற்றும் சமூகத்தின் அபிவிருத்தியிலே முக்கிய வகிப்பை வகிப்பவர்கள் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையிலே உலகலாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்படும் ஆசிரியர் தினம் மிக முக்கியமான நிகழ்வாக இருக்கிறது. உலக ஆசிரியர் தினத்திற்கு ஒரு வரலாறு உண்டு. ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞான கலாசார தாபனம், உலக தொழிலாளர் தாபனம் இணைந்து ஆசிரியர்களின் அந்தஸ்தினை பாதுகாக்கும் நோக்கிலே முன்வைத்த பரிந்துரைகள் ஆசிரியர் தினத்திற்கான அடித்தளமாக அமைந்தன.

இந்நிறுவனங்களால் வெளியிடப்பட்ட அறிக்கையானது ஆசிரியர்களின் உரிமைகள், பொறுப்புக்கள், உயர் தொழில் அந்தஸ்து, கல்வி தொழிலுக்கான பயிற்சிகள், வசதி வாய்ப்புக்களுக்கான விடயங்களை முன்னிறுத்தி இருந்தன. ஒக்டோபர் மாதம் 05 ம் திகதியே உலக ஆசிரியர் தினமாகவும் அவர்கள் பிரகடனப்படுத்தி இருந்தார்கள். உலக ஆசிரியர் தினம் முதன் முதலாக 1994 ம் ஆண்டிலே கொண்டாடப்பட்டது. இதற்குரிய தினம் ஒக்டோபர் 05 என பிரகடனப்படுத்தப்பட்டாலும் உலக நாடுகள் வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகின்றன.

இலங்கையிலே இது 06 ஆம் திகதியாக இருக்கிறது. உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யுனெஸ்கோ நிறுவனம் ஒவ்வொரு வருடமும் பொருத்தமான கருப்பொருளை வெளியிடுவது வழக்கமாக இருக்கிறது. இந்த அடிப்படையிலே 2021க்கான கருப்பொருள் 'கல்வியை மீட்டெடுப்பதில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றார்கள்' என்பது இக் கருப்பொருளாகும். இந்த விடயத்தை வைத்துக்கொண்டு நாங்கள் இன்றைய சூழ்நிலையிலே பொருத்தமாக இணைந்து அனுகலாம்.

கொவிட் -19 பெருந்தொற்று காலத்திலே பாடசாலைகள் மூடப்பட்டு பல மில்லியன் கணக்கான பிள்ளைகள் கல்வி செயற்பாடுகளை இழந்து இருக்கும் சூழலிலே பிள்ளைகளின் கல்வி மற்றும் உள ஆரோக்கியம் என்பவற்றை பேணி பாதுகாக்கும். பெறும் பொறுப்பை ஆசிரியர்களே ஏற்றிருக்கிறார்கள். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்விச் செயற்பாடுகள் இடையராது இந்தளவுக்கேனும் நிகழ்கிறது என்றால் ஆசிரியர்களின் ஈடுப்பாட்டினதும் அர்ப்பணிப்பினதும் தீர்மானிக்க விளைவே என்பதை மறுக்கமுடியாது.

சமூகமும், பெற்றோரும் இந்த அர்ப்பணிப்பையும் ஈடுப்பாட்டினையும் தெளிவாக புரிந்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் தினமானது ஒரு புறத்தில் ஆசிரியர்களை கௌரவிப்பதாக இருந்தாலும் கல்வி முறைமையிலுள்ள சிக்கலான பிரச்சினைகளை பேசுவதற்கும் தவறுவதில்லை. இன்றைய காலகட்டத்தில் ஆசிரியரின் கல்வி சார்ந்த சுதந்திரம், தன்னாதிக்க உருவாக்கம், உயர் தொழில் சார் தராதரத்தை பேணுதலும் என்ற விடயங்களை ஆசிரியர்தினம் பெரிதும் முன்னிறுத்தி அந்த விழாவை கொண்டாடி வருகின்றனர்.

இலங்கையை பொறுத்தவரையில் பெருமளவான ஆளணியினரை கொண்ட தொழிற்துறையாக ஆசிரியர் பணி அமைந்துள்ளது. இலங்கையிலே ஏறக்குறைய 2,46,000 ஆசிரியர்களும், 16,000 அதிபர்களும் கல்வி முறையிலே இணைந்திருக்கின்றார்கள். இவர்கள் தகைமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பல வகையினராக பிரிக்கப்பட்டிருந்தாலும் தமது பொறுப்புக்களை அர்ப்பணிப்புடன் ஈடுப்பாட்டுடனும் நிறைவேற்றி வருகின்ற வேளையிலே பல பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றார்கள்.

இலங்கையை பொறுத்தளவில் ஆசிரியர்கள் கல்வி, ஆசிரியர் பயிற்சி வேலைச்சுமை, போதிய வளங்கள் இன்மை மற்றும் வேதனம் குறைவு, சமூக ஏற்புடைமையிலுள்ள ஏற்ற இறக்கங்கள் என்ற வகையிலே பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன. தற்போது ஆசிரியர்கள் தனது வேதன முரண்பாட்டுக்கான தீர்வினை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுப்படுவதை நாம் நாளாந்தம் காணுகின்றோம். எனினும் உலகலாவிய ரீதியில் ஒப்பிடும்போது இலங்கையின் ஆசிரியர்களின் சம்பள மிகக் குறைவாக உள்ளது என்பதும் எல்லோரும் அறிந்தவொன்று.

மேற்கூறிய விடயங்களுக்கு மத்தியிலே ஆசிரியர் தொழில் தொடர்பான பின்வரும் கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகின்றேன்.

01. கல்வியிலே பிள்ளைகள், பெற்றோர், சமூகம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு பொறுப்பு உள்ளது என்றாலும் கல்வியை பாதுகாக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. அதற்கேற்ப ஆசிரியர்கள் செயற்படுதல் வேண்டும். முக்கியமாக இடையறுந்துப்போன மாணவர்களின் தொடர்புகள் பேணப்படுவதில்லை. நேருக்கு நேர் கற்பித்தல் இடம்பெறுவதில்லை. புதிய நுட்பங்களை பயன்படுத்தி கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை அவ்வளவு தூரம் பிள்ளைகளை சென்றடைகிறது என்பது பற்றி யோசிக்க வேண்டும். இந்த யதார்த்த பிரச்சினைகளை உணர்ந்து தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை குறித்து தீர்மானத்தை நோக்கி நகர வேண்டியவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

02. ஆசிரியர் தொழிலில் சேருபவர்கள் உயர்தகுதிக்குரிய கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். உயர்தொழில் தகுதி கருதப்படுகின்ற மருத்துவம், சட்டம், கணக்கியல், பொறியியல் போன்ற போல துறைகள் போல ஆசிரியர்களும் தமது தேர்ச்சிகளை விரிவுப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனைய துறைகளுக்கும் உயர் தொழில் சார்ந்த விடயத்திலே இடம்பெறுகின்ற முக்கியமான பொறுப்பு சேவையாகும். உண்மையிலே ஏனைய தொழில்களோடும் ஒப்பிடுகையில் ஆசிரியர்களுடைய சேவை அதிகமொன்று,அளப்பறியது. அந்த சேவையின் அடிப்படையிலேதான் எமது சமூகம் நிமிர்ந்து நிற்கிறது. இருந்தாலும் இந்த சேவையை மேலும் மேம்படுத்துவதற்கு உரிய முறையிலே தங்களுடைய தகுதிகளை தராதரங்களை மேம்படுத்தி சிறந்த உயர் தொழிலாளர்களாக மாற வேண்டுமென வலியுறுத்த விரும்புகிறேன். உண்மையிலும் நாங்கள் பல்வேறு வகைகளாக ஆசிரியர் தொழிலில் ஈடுப்படுகிறோம். இந்த நேரத்தில் எங்களின் உண்மைகள் குறித்து போராடுகின்ற அதே நேரத்தில் நாங்களும் எங்களுடைய தகுயினை உயர்த்திக்கொண்டு சிறந்த முறையில் தொழிலில் மேம்பட வேண்டுமென வலியுறுத்த விரும்புகின்றேன். ஆசிரியர்கள் 21ம் நூற்றாண்டுகளுக்கு தேவையான திறன்களை விருத்தி செய்தல் இன்னுமொரு முக்கியமான அம்சமாகும்.இன்றைக்கு வகுப்பறையிலே தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு கற்றல் செயன்முறை இடம்பெறுகிறது. இந்நிலையில் நான்கு திறன்களைலேனும் ஆசிரியர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்பது எதிர்பார்க்கப்படுகிறது. இன்று கல்வி உலகில் உலகலாவிய ரீதியில் பல புதிய கற்பித்தல் முறைகள் புதிதாக வருகின்ற போது அவை பெருமளவிற்கு தொழிநுட்பத்தோடு சேர்ந்ததாக இருக்கின்றது. இந்த கொரோனா காலத்திலே தொழினுட்ப பயன்பாடு தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களில் பின்வரும் வகையில் ஒரு கருத்து பரிமாறப்படுகின்றது. கொரோனா பெருந்தொன்றாக மாறி மக்களை சிரமப்படுத்தும் அதே வேளை மேலை நாட்டு ஆதிக்கம், அந்த ஆதிக்க தன்மை வளர் நாடுகளில் இடம் பெற விருப்பதற்கும் இது ஒரு காரணமாக அமைந்து விட்டது எனலாம்.

இதில் கல்வியும் ஒரு வழிமுறையாக அமைகிறது. இன்று தொழிநுட்பம் இல்லாவிட்டால் கல்வி இல்லை என்றளவுக்கு வந்திருக்கிறது. எதுவாக இருந்தாலும் இந்த தொழிநுட்பங்களை பயன்படுத்தி 21ம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையிலே செயற்பட வேண்டுமானால் நாம் அடிப்படையிலே நான்கு திறன்களை ஆசிரியர்கள் விருத்தி செய்தல் வேண்டும்.

1. தொடர்பாடல் திறன்.
2. தொடர்பாக வேலை செய்கின்ற திறன்.
3. திறனாய்வு திறனை விருத்தி செய்யும் திறன்.
4. ஆக்கத்திறனான விருத்தி செய்தல்

போன்றவாறு திறன்களை விருத்தி செய்தல் வேண்டும். இது தனிமனிதன் மற்றும் கூட்டாக செயற்படும் வழிமுறைகளில் இன்றியமையாத விடயமாகும்.

ஆசிரியர்கள் தாமாகவும் தங்களுடைய தோழர்களுடன் இணைந்து நிறுவன ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் இவைகளை விருத்தி செய்தல் வேண்டும். இவ்வாறான வளர்ச்சியில் ஆசிரியர் தொழில் மதிப்பிற்குரிய ஒரு கௌரவிக்கப்படுகின்ற தொழிலாக மாறும். ஆதன் கருத்து தற்போது இல்லையொன்பது அல்ல, தற்போதும் இருக்கின்றது. உயர் தொழிலுக்கான அந்தஸ்து மேம்படுத்துவதற்கு இத்தகைய திறன்கள் அவசியமாக இருக்கிறது என்பது எனது கருத்தாகும்.

நாம் அறிவு யுகத்திலே வாழுகின்றோம். அறிவின் பெருக்கம் பற்றி ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. நாளொன்றுக்கு 15,000 புதிய அறிவுகள் வந்து சேருகின்றன. அதில் எத்தனை அறிவுகளை நாம் கற்கின்றோம் என்பது முக்கிய விடயம். பாடநூல்களோடும், வழிக்காட்டல் குறிப்புகளோடும் மாத்திரம் கற்பிப்பது எவ்வளவு பொருந்தும் என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

ஆசிரியர்கள் தமது அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டும். நாள்தோறும் தங்களின் பாட அறிவையும் புற அறிவையும் விருத்தி செய்து கொள்ளும் வாசிப்பில் ஈடுப்பட வேண்டும். ஏனைய தொழிலில் உள்ளவர்களுக்கு மேற்குறித்த விடயங்கள் முக்கியமல்ல. ஏனையவர்கள் தங்கள் தொழிலோடு தொடர்புபட்ட விடயங்களை விருத்தி செய்து போதுமானதாகும். ஆனால் ஆசிரியர்கள் கல்வியோடு சமூகத்தை பயன்படுத்துவார்கள் என்ற அடிப்படையில் அறிவை இற்றைப்படுத்தி, இற்றைப்படுத்திய அறிவை மாணவர்களுக்கு வழங்க கூடிய ஆற்றல் மிக்கவர்களாக இருக்க வேண்டுமானால் அவர்கள் கல்வியியலாளர்கள் சொன்னது போல வாழ்க்கை நீடித்த கற்போராக மாற வேண்டும். நாள்தோறும் புதுப்புது விடயங்களை கற்க வேண்டும். தொடருறு உயர்தொழில் விருத்தியிலே கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைய காலக்கட்டத்தில் ஆசிரியர்களின் பணிமேலும் ஊக்குவித்திருக்கின்றது. பணியை அகலப்படுத்தியிருக்கிறது. தனியாக ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோடு மாத்திரம் ஒரு காலம் மட்டுப்படுத்தியிருந்தது. இன்று ஆசிரியர்கள் பணி பிள்ளைகளை பராமரிப்பவர்களாக மாற்றியிருக்கிறது. ஆரோக்கியமான சமூகமொன்றினை உருவாக்குவதற்கு, உற்பத்தி திறன் மிக்க சமூகமொன்றினை உருவாக்கி வளர்ந்து வருகின்றோம். பிள்ளைகளை பராமரிக்கும் விடயத்தில் ஆசிரியர்களின் பணி மேலும் அர்த்தப்பூர்வமாக அமையுமென கருதுகிறேன்.

ஆசிரியர்கள் தங்கள் உரிமைக்காக போராடிவருகின்ற நிலையில், இலங்கையினுடைய கல்வியிலே ஏறக்குறைய 6 சதவீதம் மொத்த தேசிய உற்பத்தியிலே ஒதுக்க வேண்டும் என்ற கோஷம் இருந்தாலும் நேரடியாக 2.5 சதவீதம் குறைந்த தொகையிலே கல்விக்கு ஒதுக்கப்படுகிறுது. உண்மையிலும் கல்வித்துறை மீண்டெழும் செலவிலேயே தங்கியுள்ளது.

இந்த முதலீட்டில் கிடைக்கும் நன்மைகள் நீண்ட காலத்தை நோக்காகக் கெண்டுள்ளது. இவற்றை கருத்திற்கொண்டு இன்றைய தலைமுறையினர் எவ்வாறு பேண வேண்டும் என்பதற்கான நடைமுறைகளை அவற்றை மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை பெற்றோரோடும் சமூக உறுப்பினர்களோடும், நிறவனங்களோடும் கலந்து பேசும் தன்மையும், தமது உயர் தொழிலையும் தமது உரிமைகளையும் பேனிப்பாதுகாக்க வேண்டும்.

### அதிபர் எம். கருணாகரனின் சிறப்புரை

நிகழ்வில் கே-தெகி- கந்தலோயா தமிழ் வித்தியாலய அதிபர் எம். கருணாகரன் மலையக சமூகமாற்றத்தில் ஆசிரியர் வகிபாகம். எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மலையக சமூகத்தின் மாற்றத்தில் ஆசிரியத்துவம் என்ற தலைப்பின் கீழ் பேசலாம் என நினைக்கின்றேன். மலையக சமூக அசைவியக்கத்திற்கு ஆசிரியர்களின் பங்கு மிகவும் அளப்பரியது என்றே கூற வேண்டும். மலையக சமூக வரலாற்றிற்கேற்ப, ஆசிரியத்துவத்தின் பங்கும் நீண்டு செல்கின்றது எனலாம். சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில், சி.டப்ளியு.டப்ளியு கன்னங்கர அவர்களினால், இலவச கல்வி அறிமுகம் செய்து வைக்கப்பட்டாலும் கூட, 1980 ஆம் ஆண்டுகளின் பின்னரே மலையக தோட்டப்புற பாடசாலைகளினை அரசாங்கம் பொறுப்பேற்றது எனலாம்.

இக்காலத்திற்கு பிறகு, யாழ்ப்பாணத்து ஆசிரியர்களின் பங்களிப்புடன் மலையக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான சூழ்நிலையில், மலையகத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடைய தகுதி இல்லாதவர்களினை மையப்படுத்தி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அதன்பின் க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களினை அடிப்படையாகக் கொண்டு மலையகத்தில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன எனலாம்.

இதன் விளைவாக மலையக பாடசாலையின் கல்வியானது வளர்ச்சியை நோக்கிச் சென்றாலும் கூட, தேசிய மட்டத்தில் மலையக கல்வி வளர்ச்சியை நிவர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, மலையக பாடசாலை ஆசிரியர்களால் அந்த இடைவெளி நிரப்பப்படவில்லை என்றே கூறவேண்டும்.

இதன்பிறகு ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் உயர்தரம் படித்தவர்கள் மலையகத்தில் அதிகமாக காணப்பட்டதோடு, ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியிலிருந்து ஆசிரியர் பயிலுனர்களும் வெளிவர தொடங்குகிறார்கள். அதே நேரத்தில் பட்டதாரி ஆசிரியர்களும் மலையகத்தில் உதயமாக தொடங்குகிறார்கள். இவ்வாறாக மலையகத்தில் உருவாக்கிய ஆசிரியர்கள் வெறுமனே மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களாக மட்டும் அல்லாமல், நீண்ட சமூகப் பார்வையை நோக்கி படையெடுத்து வரும் இயலுமை கொண்டவர்களாக மாறுகிறார்கள்.

மலையகத்தின் சமூக மாற்றத்தில் ஆசிரியர்களின் வகிபங்கானது கலைகளின் ஊடாக வளர்ச்சி அடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது வடகிழக்கு பகுதிகளில், கலைஞர்கள் வேறு. ஆசிரியர்கள் வேறு. ஆனால் மலையகத்தை பொருத்தமட்டில் மலையக ஆசிரியர்களில் 90 சதவீதமானோர் கலைஞர்களாகவே காணப்பட்டனர். இவர்களின் மூலமாக மலையக சமூகத்தில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது எனலாம்.

மலையகத்தில் கற்ற மத்தியதர வர்க்கம் உருவாகிய இச்சூழ்நிலையில், மலையகத்தில் ஆசிரியர் நியமனம் பெற்ற மத்தியதர வர்க்கத்தினரில், ஒரு பிரிவினர் மலையகத்திலிருந்து நகர்புறங்களை நோக்கி நகர்கிறார்கள். இவர்கள் தாங்கள் மலையகத்தான் என்பதையும், தமது பெற்றோர் தோட்டத் தொழிலாளர்கள் என்பதையும் மறந்து செயற்படத் தொடங்கினர்.

அதேசமயம் ஏனைய மலையக ஆசிரியர்கள் விடாப்பிடியாக மலையகத்திற்குள் இருந்துக் கொண்டு, சமூக அசைவியக்கத்திற்கு தங்களின் பங்களிப்பினை மிகவும் காத்திரமான வடிவத்தில் வழங்க முற்பட்டனர் எனலாம். எனவே, மலையக சமூக அசைவியக்கத்திற்கு, பாரிய உந்துசக்தியாக, மலையகத்திலே பிறந்து மலையகத்திற்காக சேவை செய்யும் ஆசிரியர்கள் இருந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இக்காலகட்டத்தில், மலையக தமிழர்களின் பேச்சு மொழியாக இருக்கட்டும், அரசியல் ரீதியான கொள்கையாக இருக்கட்டும், பொருளாதாரக் கொள்கையாக இருக்கட்டும், இதனை கொச்சப்படுத்துவதுபவர்களாகவே ஏனையவர்கள் இருந்தமையால், இவ்வாறான ஒரு பின்புலத்தில் இருந்துக்கொண்டு மலையக ஆசிரியர்கள் தான் சார்ந்த சமூகத்தினை முன்னகர்த்திச் செல்ல, ஒரு பெரும் போராட்டமே செய்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, மலையக மாணவர்கள் உயர்க்கல்வியை பெற்று பல்கலைக்கழகத்திற்குள் தம் சமூகத்திற்கான அடையாளத்தினை வழங்குவதன் மூலம், தேசிய ரீதியாகவும் மலையக மாணவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள ஆசிரியர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும் .

அத்தோடு, தமிழ்த்தினப் போட்டிகளில் கூட மலையக மாணவர்கள் தம் திறமைகளினை தேசிய மட்டத்தில் வெளிப்படுத்துவதற்கு மலையக ஆசிரியர்களின் பங்களிப்பு அளப்பரியது எனலாம். மலையக சமூகத்தினை பொருத்தமட்டில், ஆரம்ப காலங்களில் ஆரம்பக் கல்வியை பெறுவதற்கு கூட வடகிழக்கு ஆசிரியர்களை நம்பியே இருந்தோம். இன்று மலையக கல்வியானது, ஆசிரியர் துவத்தில் ஒரு பரிபூரணமான எல்லையை நோக்கி நகர்வதினை எம்மால் அவதானிக்க முடிகிறது.

மலையக ஆசிரியர்கள், மலையக சமுதாயத்தில் இடம்பெறும் சம்பள பிரச்சினையாக இருக்கட்டும், தொழிலாளர்களின் பிரச்சினையாக இருக்கட்டும் இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் மலையக ஆசிரியர்கள் பங்களித்ததன் மூலம் சமூக மாற்றத்திற்கு வித்திட்டார்கள் என்றால், அது மிகையாகாது. குறிப்பாக, போராட்டங்களில் தொழிலாளர்களினால் காட்சிப்படுத்தப்படும் பதாதைகளில் உள்ள எழுத்துகளைப் பார்த்தால், அவர்களின் பின் ஒரு படித்த சமுதாயம் உந்து சக்தியாக இருப்பதையும், அவர்கள் ஆசிரியர்களாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. அதுமட்டுமல்லாமல், மலையகத்திலிருந்து படித்து ஊடகவியலாளர்களாக மாறி இருக்கின்றவர்கள் ஆசிரியர்கள்தான், சமுதாயம் சார்ந்த விடயங்களை அவ்வப்போது பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் மூலமாக வெளிப்படுத்தி, தன் சமூகத்திற்கான ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தி வருவதையும் அவதானிக்க முடிகின்றது என்றார்.



# பால் சுரக்காத இறப்பர் வாழ்க்கை

ரெஜினா
yasoreji@gmail.com

மலையகம் என்றவுடன், மலைத்தொடர், தேயிலைத் தோட்டங்கள், லயன் வீடுகள் போன்ற விடயங்கள் தான் முதலில் ஞாபகத்தை நெருடும். . ஆனால், பலராலும் பேசப்படாத ஒரு இடம்தான் இந்த இறப்பர் தோட்டம். இறப்பர் தோட்டத்தினை மட்டுமே நம்பி வாழும் குடும்பம் நடாத்தும் டும்பங்கள் மலையகத்தில் உள்ளன என்பதும் பலராலும் அறியப்படாத விடயமாக தான் இருக்கின்றனர்.

மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாக இருப்பர். இறப்பர் தோட்டங்கள் பல, கிராமங்களை அண்மித்ததாக இருப்பதால், இறப்பர் தோட்டங்களில் வேலைச் செய்யும் தமிழ்த் தொழிலாளர்கள், முற்றுமுழுதாக சிங்கள மொழியை பேசுவதுடன், சிங்கள கலாசாரத்துக்கும் மாறிவிடுகின்றனர். இதுதான் உண்மையாகும்.

மலையகத்தின் கீழ் பகுதியில், இன்றேல் சப்ரகமுவ மாகாணங்களில் இவ்வாறானதொரு நிலைமையை நாம் பார்க்கலாம். அதில், கேகாலை மாவட்டத்தை பார்க்குமிடத்து, பெரும்பாலான இறப்பர் தோட்டங்களில், தமிழ்த் தொழிலாளர் குடும்பங்களே வேலைச் செய்கின்றனர்.

எனக்கு இது ஒரு புது அனுபவமாக இருந்தது. கேகாலைக்குச் சென்றிருந்த நான், அங்கு இறப்பர் தோட்டத் தொழிலாளியின் வீட்டில் ஒரு நாள் தங்கியிருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அப்பொழுது நான் அவரிடம் இறப்பர் தொழிலையும் அதில் வேலை செய்பவர்கள் பற்றியும் தெரிந்து கொள்ள ஆவல் மிகுந்தவளாக மெதுவாக எனது கேள்விகளை லக்ஷ்மி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அம்மாவிடம் தொடுக்க ஆரம்பித்ததேன்.

அதனை, எமது வாசகர்களுக்காக கேள்வி, பதில் முறைமையின் கீழ் தருகின்றோம்.

**இறப்பர் தோட்ட வேலைகளைப் பற்றி கூறுகளேன்.**

இறப்பர் மரங்களை கத்தியால் வெட்டி அதில் இருந்து வடியும் பாலை சேகரிக்க வேண்டும். மரத்தில் கட்டி இருக்கும் சிரட்டை வடிவான கோப்பையில் பால் வடியும். இவ்வாறு எனக்கு ஒதுக்கப்பட்ட மரங்கள் அடங்கிய இடங்கள் அனைத்திலும் செய்ய வேண்டும்.

**நீங்கள் நாள், கூலிக்காக வேலை செய்கிறீர்கள்?**

இல்லை, இல்லை மாத சம்பளத்துக்கு வேலை செய்கிறேன். ஒரு நாள் சம்பளம் ஆயிரம் ரூபாய் கொடுப்பார்கள். இறப்பர் பால் 6 கிலோ கிராம் கொண்டுவந்தால் மாத்திரமே முழுமையான சம்பளம் கிடைக்கும்.

**தினமும் ஆறு கிலோ கிராம் இறப்பர் பால் கொண்டு வர முடியுமா?**

முடியும். ஆனால், மழைக் காலமாக இருக்குமாயின் ஆறு கிலோகிராம் பால் கொண்டு வருவது என்பது மிகவும் கடினமான விடயமாகும். அத்தோடு அட்டை கடிக்கு உள்ளாகவேண்டிய நிலைமை காணப்படும். வழியில் பாலை தூக்கிக்கொண்டு மரத்திற்கு மரம் சென்று பால் சேகரிப்பதும் சற்று கடினமாக காணப்படும்.

**அவ்வாறான சந்தர்ப்பங்களில் முழுமையான பணம் கிடைக்காது; அப்படித்தானே?**

ஆம்! ஆயிரம் ரூபாய் கிடைக்காது. அன்றைய நாளுக்கான சம்பளம் செய்யப்படவும் மாட்டாது. உங்களுக்கெல்லாம் விளங்கும் வகையில் கூறுவதாயின் ஆறு கிலோ கிராம் எடுத்தால் மாத்திரமே அன்றைய நாளுக்கான ஒருநாள் பெயர் பதியப்படும். அவ்வாறு ஆறு கிலோ கிராம் பால் எடுக்காவிட்டால், ஒரு கிலோ கிராம் இறப்பர் பாலுக்கு 100 ரூபாய் என்ற அடிப்படையில் சம்பளம் ஏட்டில் பதியப்படும்.

**ஒரு கிலோ கிராமுக்கு 100 ரூபாய் தானா? உங்களுக்கு இப்பணத்தினை கொண்டு செலவினை பார்ப்பதற்கு போதுமானதாக இருக்குமா?**

இல்லை, கஷ்டமாகத்தான் இருக்கும். காலை 6 மணிக்கு இறப்பர் தோட்டத்திற்கு சென்று மரங்களை வெட்டி பின்பு பாலை சேகரித்துக் கொண்டு வந்து தொழிற்சாலையில் கொடுப்போம். அப்போது அன்றைய நாளுக்கான பெயர் பதியப்படாதவிட்டால், மன கஷ்டமாகதான் இருக்கும். என்ன செய்வது? இவ்வாறு கஷ்டப்பட்டால்தான் அடுப்பில் உலை கொதிக்கும். காலநிலையும் எதிராக இருக்கிறது என்று மனதில் நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 250 மரங்கள் தொடக்கம் 300 மரங்கள் வெட்ட வேண்டி இருக்கும்.

**இவ்வாறு இறப்பர் பால் வெட்டும் போது ஏதேனும் பிரச்சினைகளை சந்திப்பது உண்டா?**

ஒன்றா, இரண்டா எண்ணில் அடங்காத அளவிற்கு பிரச்சினைகள் உள்ளன. இங்கு வேலை செய்யும் அனைவருமே குடும்ப கஷ்டத்தில் இருந்து மீள்வதற்காகதான் ஒவ்வொரு நாளும் வேலை செய்கிறார்கள்.

இறப்பர, தோட்டத்தில் சில இடங்கள் காடுகள் போல காணப்படும். அவ்வாறான இடங்களுக்குள் நுழைந்ததான் மரத்தினை வெட்டி பால் சேகரிக்க வேண்டும். மனதளவில் பயம் இருக்கும். அதுமட்டுமன்றி அட்டைகள் கடிக்கும். சில வேளைகளில் பாம்பு, விஷப் பூச்சிகளிள் சீண்டிவிடும். குளவிகள் கலைந்துவந்து கொட்டிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

இறப்பர் பாலை வெட்டி வாளிகளில் அதை சேகரித்து கையிலும் தலையிலும் சுமந்துகொண்டு நாங்களே தொழிற்சாலைக்கு பாலை கொண்டுச் செல்லல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தலையும் கையும் வெகுவாக வருத்தத்தைத் தரும்.

**மழைக் காலங்களிலும் இறப்பர் தோட்டத்திற்கு தொழிலுக்கு செல்வீர்களா?**

இல்லை, மழைக்காலங்களில் சில்லறை வேலைகள் அப்படி இல்லாவிடின் தேயிலை கொழுந்து பறித்தல் உள்ளிட்ட தொழில்களுக்குச் செல்லுவோம்.

**இறப்பர் பால் எடுப்பதற்கு சென்றதன் பிறகு மழை வந்தால் என்ன செய்வீர்கள்?**

இருக்கின்ற பாலை எடுப்போம். சிலவேளைகளில் இறப்பர் பால் மழையில் நனைந்து அடித்துச் சென்றுவிடும். அதேபோல் மழைக்காலங்களில் இறப்பர் பால் உறைந்தும் விடும். எனவே, மழைக்காலங்களில் இறப்பர் மரமொன்றினை பாலுக்காக வெட்டுவது என்பது கடினமான விடயமாகும். இதுபோன்ற வேளைகளைச் செய்தாலும் எவ்வித ஊதியமும் வழங்கப்படமாட்டாது.

**இறப்பர் தோட்டத்தில் வேலை செய்வது கடினமாக காணப்படாதா?**

ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், போகப் போக பழகி விட்டது. எனது வாழ்க்கையில் நான் படும் இன்னலுக்கும் மத்தியில் இது ஒன்றும் கஷ்டமில்லை.

எவ்வளவு கஷ்டம் வந்தாலும் போராடனும். எல்லாம் என் பிள்ளைகளுக்காக தான். பிள்ளைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும். பிள்ளைகளுக்காக வாழனும் என்று தனது தொழில்சார்ந்த அனுப்பவங்களை அப்பெண் பகிர்ந்துகொண்டார்.

# இரட்டைக்காதலிகளாய் கைப்பிடித்து பயணிக்கின்றேன்

## பாடலாசிரியர் புசல்லாவை கணபதி செவ்வி

இரா.யோகேசன்
yogesan12press@gmail.com

“விமானப்பறவை என்னை ஏற்றிச்சென்று நான் கனவுகண்ட கலை மண்ணில் இறக்கிவிட்டபோது நான் அடைந்த மகிழ்ச்சியிருக்கிறதே... ஒரு தாய் தனது முதற்பிரசவ சந்தோசம் போன்றது அது. கிட்டத்தட்ட நான் ஒரு மாத காலம் நீடித்தது” என மனம் திறந்த பாடலாசிரியர் புசல்லாவை கணபதி, “எனது பாடல்கள் வெறும் வார்த்தைகளல்ல, அவை மிகப்பெரிய வாழ்க்கை” என்றார். அவர் வழங்கிய விஷேட செவ்வி வருமாறு:

**1 தங்களைப்பற்றிய அறிமுகத்தை தருவீர்களா?**

நான் தே.கணபதி, புசல்லாவை பிரதேசத்தில் நிவ்பீகொக் என்னும் தோட்டத்தில் சப்ளி என்ற ஊரில் பிறந்து, அப்பிரதேச பாடசாலையயில் ஆரம்பப்பிரிவையும், புசல்லாவை சரஸ்வதி தேசிய கல்லூரியில் உயர்தரம் வரை கற்று, இந்திய பல்கலைகழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டங்களைப் பெற்று அரச பாடசாலையொன்றின் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

**2 வெறுமனே கணபதியென்ற தங்களது நாமம், எப்படி ‘புசல்லாவை கணபதி’ என மாறியது?**

உண்மைதான்! கணபதி எவ்வாறு புசல்லாவை கணபதி ஆனான் என்பது ஒரு கதைதான். என் எழுத்துகளுக்கு ஓர் அடையாளம் தேவை எனது கல்லூரி காலத்தில் கவிஞர் பாடலாசிரியர், எனது மண்ணின் மைந்தன் இரட்டைப்பாதை சேகர் அவர்களின் பாடல்களை கேட்டு வளர்ந்தவன் நான். தான் பிறந்த ஊரையே தனது பெயருக்கு அடையாக வைத்திருக்கும் ஒரு கவிஞனை கண்ணுற்றேன். அந்த நாமத்தின் ஈர்ப்பாலும் என்னை வார்த்தெடுத்த மறைந்த கலைஞர் ஸ்ரீதர் பிச்சையப்பா அவர்களிடம் பல வருடங்கள் பக்கத்தில் இருந்து கவிதை, பாடல் எழுதுவதற்கான நுணுக்கங்களை கற்றுக்கொண்டு வளர்ந்தபோது எதேச்சையாக ‘டேய் தம்பி இந்த ஸ்ரீதர் இல்லாட்டியும் நீ என் பேரை வாழ வைப்படா’ என்று எனது கவிதைகளைப் படித்துவிட்டு வலது கையை பிடித்து முத்தமிட்டு ‘டேய் நீ இனி புசல்லாவை கணபதி என்று பேர் வைத்துக்கொள்’ என்று என் பெயருக்கு முன்னால் ஊரின் பெயரையே அடையாக வைத்தார். அன்று தொடக்கம் இந்த நாமத்துடனே எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**3 கவிதை எழுதிக்கொண்டிருந்த நீங்கள் எவ்வாறு பாட்டெழுத ஆரம்பித்தீர்கள்?**

கல்லூரி காலத்தில் கவிதை எழுதிக்கொண்டிருந்த எனக்கு தென்னிந்திய திரைப்படப் பாடல்களை கேட்கின்றபோது அதை நான் எழுதியிருந்தால் எவ்வாறு இருக்குமென எழுதிப்பார்ப்பேன். எழுதியதை ஏதோ பெரிய படைப்பாக எண்ணி எனது வகுப்பு நண்பர்களிடம் காட்டி பாராட்டுமழையில் நனைந்த மகிழ்ச்சி இன்று நினைத்தாலும் கண்கள் வேர்க்கும். அதன்பிறகு கவிதையும் பாட்டும் எனது இரட்டைக்காதலிகளாய் கைப்பிடித்துக்கொண்டு நடக்கின்றனர்.

**4 தங்களது படைப்புக்கள் பற்றி?**

இதுவரை ஏராளமான கவிதைகள், சிறுகதைகள் பாடல்களை எழுதியிருக்கிறேன். ‘அச்சுக்குவராத கவிதைகள்’ ‘கடவுள் படைக்காத மனிதர்கள்’ என்ற இரண்டு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறேன். இரண்டும் விருதுகளை தேடிக்கொண்ட கவிதைத்தொகுப்புகள். முதலாவது கவிதைத்தொகுப்பு எனது பள்ளிகால நண்பர்களின் உதவியோடு வெளியிடப்பட்டது. அவர்கள்தான் என் கவிதா தாகத்தை அறிந்து நீருற்றிய உள்ளங்கள். சிறுகதையிலும் பதக்கங்களை, பரிசில்களை பெற்றிருக்கிறேன்.

**5 இதுவரை நீங்கள் எழுதிய பாடல்களைப் பற்றியும் குறிப்பிட முடியுமா?**

2007 ஆம் ஆண்டு சக்தி தொலைக்காட்சி மேற்கொண்ட அதி உன்னத படைப்பென்றே குறிப்பிட வேண்டும். சக்தியின் இசை இளவரசர்கள் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியை நடாத்தியது. இந்த நிகழ்ச்சிதான் என்னை பாடலாசிரியனாய் பரிணமிக்கச் செய்தது. ஆயிரக்கணக்கான போட்டியாளர்களுக்கு மத்தியில் நானும் கலந்துகொண்டேன். எனக்குள் ஒரே குழப்பம் பாடுவதா, பாட்டெழுதுவதா? ஏனெனில், அக்காலத்தில் நான் ஓரளவு பாடுவேன். கல்லூரி இலக்கிய மன்றத்தில் எனது பாடல் நிச்சயம் இருக்கும். பிறகு பாட்டெழுதுவதுதான் பொருத்தம் எனப் பல தேர்வுகளில் இறுதியில் முடிவானது.

மேடையில் கலைஞர் ஸ்ரீதர் பிச்சையப்பா, இசையமைப்பாளர் கருப்பையாபிள்ளை பிரபாகரன், கவிஞர் கனிவுமதி ஆகியோர் என்னை இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்தார்கள். அதன்பிறகு, எனது கனவு கொஞ்ச கொஞ்சமாய் அரங்கேறத்தொடங்கியது. பிறகு தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களோடு நான் தென்னிந்தியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டேன். அங்கு சிறப்பான பயிற்சி வழங்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அருகில் இருந்து உதவியவர்கள், ஊடகவியலாளர் ஷியாவுல் ஹசன், மாலன், தென்னிந்திய பின்னணிப் பாடகர் யுகேந்திரன் போன்றவர்களை குறிப்பிட்டுச்சொல்ல முடியும்.

**6 திரைப்பாடலுக்கு பாட்டெழுதுவது தொடர்பாக தாங்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் பற்றி?**

விமானப்பறவை என்னை ஏற்றிச்சென்று நான் கனவுகண்ட கலை மண்ணில் இறக்கிவிட்டபோது, நான் அடைந்த மகிழ்ச்சியிருக்கிறதே... ஒரு தாய் தனது முதற்பிரசவ சந்தோசம் போன்றது அது. கிட்டத்தட்ட நான் ஒரு மாத காலம் நடிகர்கள், பாடகர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள் இவர்களோடு வாழ்ந்திருக்கிறேன். நான் திரையில் இரசித்த பலரை, பக்கமிருந்து அவர்களிடம் பயற்சிபெறும் பாக்கியத்தை பெற்றுத்தந்த இறைவனுக்கும், சக்தி தொலைக்காட்சிக்கும் நன்றிகள். கவிஞர். நா.முத்துக்குமார், பா.விஜய், சிநேகன், விவேகா போன்றோரிடம் எனக்கான பாட்டெழுதும் பயிற்சி வழங்கப்பட்டது.

இயற்றிய பாடலை இசையமைப்பாளர் தேவா, சபேஸ் முரளி, ஸ்ரீகாந்த் தேவா இன்னும் பலரிடம் பாடிக்காட்டுவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன் பிறகு இயக்குநர்களிடம் பாடலுக்கான சூழலைப்பெற்று பாட்டெழுதி, இன்றும் எல்லோரும் உச்சரிக்கும் ‘பூவின் வாசம் பார்த்தால் உன் கூந்தல் வாசம் வீசுதே’ என்ற பாடல் இசை இளவரசர்களில் மகுடம் சூடிக்கொண்டது. இப்பாடலின் வரிகளுக்கு இசையமைத்த நண்பர் பிரதீர், பாடகர்கள் சிப்னாஸ், லூசியா வெற்றி கிரீடத்திற்கு வித்திட்டவர்கள். அதன் பிறகு தொடர்ந்து இன்றுவரை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**7 நம் நாட்டில் எந்த இசையமைப்பாளர்களுக்கு பாடல் எழுதியிருக்கிறீர்கள்?**

இன்று ஜனரஞ்கக இசையமைப்பாளரும் நமது நாட்டின் இசையை சர்வதேசம் வரை கொண்டுச் சென்ற இசையமைப்பாளர்கள் பாத்தியா சந்தோஸ், சொல்லிசைப்புலவர் தினேஸ், சுதர்சன் சக்தியின் உயிரே தொகுப்பு, சிரச டான்சிங் ஸ்டார் தமிழ் பெயர்ப்பு, இசையமைப்பாளர் துஸ்யந்தன் கீதப்பிரியன், இசையமைப்பாளர் கீதப்பிரியன், ரணில் ஜித்தேன்திரா, இசையுலகில் புதிதாக இணைந்திருந்திருக்கு புத்தளம் தனூஸ், இசையமைப்பாளர்கள் டிரோன் பெர்ணான்டோ, ராஜ் தில்லையம்பலம் இப்படி பலருக்கும் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**8 நமது நாட்டு பாடலாசிரியர்களில் தற்களது துறையில் போட்டியாக யாரைக் கருதுகிறீர்கள்?**

நிச்சயம் எனது பயணத்தில் போட்டியாக யாரையும் நான் கருதுவது இல்லை. வாழ்த்திக்கொண்டே வளரும் பக்குவம் அறிந்தவன் நான். ஓர் இசையமைப்பாளன் வழங்குகின்ற சூழலுக்கு எதிர்பார்புக்கு தீனி போடுபவனே பாடலாசிரியனாக இருக்க வேண்டும்.


மற்றவரை வாழ்த்துவதும் தேடிக் கற்று வளர்வதுமே ஒரு கலைஞனுக்கு தனித்துவமான அங்கிகாரத்தை வழங்கும். எனது பாடல்களின் தனித்துவத்துவத்தை பாதுகாத்துக்கொள்வதில் கவனமான இருக்கிறேன். ஏனெனில், எனது குருநாதர்கள் ஸ்ரீதர் பிச்சையப்பா, நா.முத்துக்குமார் போன்றவர்களால் இத்துறைக்காக நான் பட்டைத்தீட்டப்பட்டவன்.

**9 தாங்கள் இதுவரை பெற்றுக்கொண்ட விருதுகள் பரிசில்கள் பற்றி குறிப்பிடுங்கள்?**

இசை இளவரசர் விருது, மாகாண சாத்திய விருதுகள், நட்சத்திரக் கலைப்பேரவையின் விருது, முன்னாள் பிரதமர் ஜயரத்ன அவர்களால் சிறுகதைத் துறைக்காக வழங்கப்பட்ட பதக்கமும், கௌரவமும் ஏராளமான சான்றிதழ்கள், பரிசில்கள் நாளாந்தம் என் வளர்ச்சியில் பங்களிப்பு செய்யும் ஆதரவாளர்களிடமிருந்து வரும் வாழ்த்துகளும் விருதுகளே!

**1 1.தங்கள் குருநாதர் நா.முத்துக்குமாரை குறிப்பிடுகிறீர்கள். அவரிடம் தங்களுக்கு கிடைத்த ஆலோசனை எப்படி அமைந்தது?**

அவரை நான் கண்ணுற்றபோது ‘நினைத்து நினைத்து பார்த்தேன்...’ என்ற பாடலை வைத்தே எனக்கான பயிற்சியை வழங்கினார். அப்போது அவர் கூறியது, வித்துவச்செருக்கல்ல பாடல் இது மக்களை சென்றடைய அதில் எளிமை இருக்க வேண்டும். பல்லவி சரளமான வார்த்தையோடு ஆரம்பித்தல் சாலச்சிறந்தது என்று பாடலில் இடம்பெறுவது வெறும் வார்த்தைகளாக இருக்கக்கூடாது. வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்ற ஆற்றுப்படுத்தல் வார்த்தைகள் என் அடிமனதில் கல்வெட்டாய் இன்றும் கிடக்கிறது.






# முடிச்சுமாற்றிகளிடம் விழிப்பாக இருக்கவேண்டிய காலமிது

சுமார் இரண்டரை வருடங்களுக்குப் பின்னர், கொண்டாட்டமொன்று, குடும்பத்துடன் கொண்டாடப்படுகின்றது என்றால், எதிர்வரும் தீபத்திருநாளைத் தான் கூறவேண்டும். கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர், எந்தவொரு பெருநாளும், பெருநாளாகவே கொண்டாடப்படவில்லை.

எனினும், பிளவ வருடப்பிறப்புக்கு, எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி நாடு திறக்கப்பட்டமையால், பிளவ வருட கொரோனா கொத்தணி, இன்னும் வாட்டி வதைத்துக்கொண்டுதான் இருக்கிறது. இந்நிலையில், மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகளும் நாளை (31) முதல் முற்றாக நீக்கப்படுகின்றன.

பயணக்கட்டுப்பாடுகள் காலத்தில் பெருநகரங்களில் ஏற்பட்ட வாகன நெரிசலைக் கண்ணுற்று, இதுதான் பயணக்கட்டுப்பாடா? என, மூக்கின் மேல் விரலை வைத்துப்பார்த்தோம். அதன்பின்னர், கொஞ்சம் கொஞ்சமாகப் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, முழுநாடும் முழுமையாகத் திறக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், எதிர்வரும் தீபாவளி கொண்டாடப்படவுள்ளது. தீபத்திருநாள் இந்துக்களுக்கு விஷேடமான பண்டிகை என்றாலும் மலையகத்தில், அப்பெருநாள் களைக்கட்டியிருக்கும். கொரோனாவுக்கு முன்னரான காலப்பகுதியில், நாமெல்லாம் அவதானித்திருப்போம்.

தீபாவளியை வரவேற்பதற்கான முன்னேற்பாடுகள் மும்முரமாக இருக்கின்றன. புத்தாடைகளைக் கொள்வனவு செய்வது முதல், வீட்டைச் சுத்தப்படுத்தி, பலகாரங்களை தயாரிக்கும் வரையிலான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

கொரோனாவுக்கு அஞ்சாதவர்கள் நகரங்களை நோக்கி படையெடுக்கின்றனர். வியாபாரமும் ஓரளவுக்கு களைக்கட்டியுள்ளது. இந்நிலையில், நகரங்களுக்கு வருவோரிடம் மட்டுமன்றி, முக்கிய வர்த்தக நிலையங்களை குறிவைத்து, கொள்ளையடிக்கும் கூட்டமொன்று மலையத்தில் பல நகரங்களுக்கும் ஊடுருவியுள்ளது. ஹட்டனில் சிக்கிக்கொண்ட கொள்ளையர், தீபாவளியை இலக்குவைத்தே கொள்ளையில் ஈடுபட்டதாக பொலிஸில் வாக்குமூலமளித்துள்ளனர். ஒருங்கிணைக்கப்பட்ட கொள்ளையர் கூட்டம் ஊடுறுவியிருக்கலாம். ஆகையால், நகைகளை அப்படியே அள்ளி மாட்டிக்கொண்டு, நகரங்களுக்கு உலாவருவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்; பணத்தை மிகக் கவனமாக கையாண்டு, தேவையானதை மட்டுமே கொள்வனவு செய்யவேண்டும். அத்துடன், போலி நாணயத்தாள்கள் குறித்து விழிப்பாக இருக்கவேண்டும். அவற்றுக்கெல்லாம் அப்பால் சுகாதார வழிகாட்டல்களை முறையாக கடைப்பிடிக்கவும் வேண்டும்.

முகக் கவசம் அணிந்திருப்பதால், முடிச்சுமாற்றிகளை உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளமுடியாது. ஒன்றரை வருடங்களுக்குப் பின்னரான கொண்டாட்டத்தில், முடிச்சுமாற்றிகளிடம் ஏமாந்துவிடக்கூடாது. 'சுடுகிறது மடியைப் பிடி' என்பதைப் போல, இறுதிவரையிலும் காத்திருக்காமல், தேவையானதை அவ்வப்போது கொள்வனவு செய்துகொள்ளவும். விலைவாசி அதிகரிப்பை கேட்டாலே முகத்தை சுளிக்கவேண்டிய நிலையில், பெருநாளை விமரிசையாகக் கொண்டாடப் போய், கடன்குழிக்குள் விழுந்துவிடாது, இருப்பதைக் கொண்டு இப்பெருநாளைக் கொண்டாடுவதற்கு திடசங்கற்பம் கொள்ளவேண்டும். அதனூடாகவே குடும்ப பொருளாதார சுமையில் இருந்து அடுத்தடுத்த மாதங்களிலேனும் மீண்டெழுந்து கொள்ளலாம்.

வேலைவாய்ப்புகள், போதியளவான சம்பளம், கூலி வேலைக்கு ஆட்களை இணைத்துக்கொள்ளல் குறைவாக இருப்பதால், பலரும் கைவரிசையை காட்டிவிடுகின்றனர். ஆகையால், தீபாவளி கொண்டாட்ட கொள்வனவின் போது, முடிச்சுமாற்றிகளிடம் சிக்கிக்கொள்ளாது, விழிப்பாக இருக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## 'ஒரே நாடு; ஒரே சட்டம்':
# சிங்கள இனவாதத்தின் வாள்முனை

**லக்ஸ்மன்**

சிங்களப் பெரும்பான்மை மக்களின் ஜனாதிபதியே நான் என்று நிரூபிக்கும் வகையிலும் "நான் ஒரு சிங்கள இனவாதி" என்று மார்தட்டிக் கொள்ளுமளவிலுமே, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் செயற்பாடுகள் யாவும் இருந்து வருகின்றன.

அவர் பதவிக்கு வந்தது முதல் கொவிட் பரவல், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அவருடைய பெரும்பான்மைத்தன ஆதிக்க சிந்தனையில் மாற்றம் இருப்பதாக தெரியலில்லை.

2019ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெறும் போது நாட்டை மீட்க வந்த மீட்பராகப் பார்த்த சிங்கள மக்களும் இவருடைய செயற்பாடுகளுக்கு எதிர்ப்புகளைத் தெரிவிக்கும் நிலை காணப்படும் பேதே அவருடைய திட்டமிட்ட செயற்பாடுகள் பல அரங்கேறுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுடைய பாரம்பரிய தாயகம் என்ற நிலைப்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் காலங்காலமாக செயற்படும் கொள்கையே இலங்கையில் பெரும்பான்மை ஆதிக்கத்தினூடு இருந்து வந்திருக்கிறது.

கோட்டாபய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் கிழக்கு மாகாணத்துக்கென தனியானதொரு தொல்பொருள் ஜனாதிபதி செயலணியொன்றினை தாபித்திருந்தார்.

இந்தச் செயலணி பெரும்பாலும் தமிழர்களுடைய புராதன இடங்களையெல்லாம் சிங்களப் பௌத்தத்துக்கானது என்ற நிலைப்பாட்டினையே எடுத்தது. அதனால் ஏற்பட்ட குழப்பங்கள், பிரச்சினைகள் இன்னமும் ஓய்ந்துவிடவில்லை.

அதேபோன்று, மாகாண சபைகளினுடைய அதிகாரங்களைக் குறைப்பதற்கான செயற்பாடுகள் நடைபெற்றன. இதில் மாகாணப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகக் கையகப்படுத்துதல், வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவருதல் போன்றன இருந்தன.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை கருக்கொண்டதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான சிங்களக் குடியேற்றங்களே. இது தமிழர்களின் இனப்பரம்பலைக் குறைத்தல் நோக்கமாக இருந்தது. அதே போன்று வரலாற்று முக்கித்துவம் மிக்க தொல்பொருள் இடங்களையும் தமிழர்களினுடையது என்ற நிலையில் இருந்து அகற்றிவிட கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஜனாதிபதி செயலணி பெரும்பான்மைப் பிக்குகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஏற்பட்ட இவ்வாறான பிரச்சினைகள் வேறு விதத்தில் நகர்த்தப்பட்டிருந்தாலும் அதனை இல்லாமல் செய்து, இந்தச் செயலணி செயற்படத் தொடங்கியது. அதற்கெதிராகத் தமிழ்மக்கள் செயற்பட முடியாத நிலையை கொவிட்- 19 பெருந்தொற்று தோற்றுவித்தது.

அந்தவகையில், சிறுபான்மை மக்களினுடைய இருப்பிலும், அவர்களுடைய நம்பிக்கையிலும் மண்ணைத்போடும் ஒரு செயற்திட்டமாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணி சிங்கள பேரினவாதத்தின் ஒட்டுமொத்த இனவாதியாக எல்லோராலும் விமர்சிக்கப்படும் கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இதன் உட்பொருளை நாம் எல்லோரும் விளங்கிக் கொள்ள முடியும் என்பதுடன், விமர்சிப்பதில் எந்தப் பயனுமில்லை. இருந்தாலும், நாட்டில் செயலணிகள் அமைக்கப்படுவதும். அவற்றுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதும் ஒன்றும் புதிதல்லவே என்ற வகையில் நாம் இருந்து விடவும்முடியாது என்பதே முக்கியம்.

பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்டு ஜனாதிபதியாகத் தெரிவான முன்னாள் இராணுவ கேர்ணல் கோட்டாபயவின் பதவியேற்பிலேயே அவருடைய சிந்தனைப் போக்கும் ஆதிக்கமும் வெளிப்பட்டிருந்தது.

இருந்தாலும், அரசாங்கத்திலும் அவருடைய கட்சியிலும் ஒட்டியிருக்கும் தமிழர்கள் மூலம், ஏதோ சிறுபான்மை மக்களின் நலன் மீது அக்கறை உருவாகலாம் என்று பலரும் சிந்தித்திருந்தனர். அவர்களும் அவ்வாறுதான் பெருமெடுப்பில் பிதற்றியிருந்தனர்.

ஆனால் நடப்பதோ வேறு என்றுதான் சொல்லவேண்டும். அவ்வாறான வேளைகளில் வாய்மூடி பொம்மைகளாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணி ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டமை தொடர்பில் விமர்சிப்பவர்கள் ஏதோ அதற்கு ஞானசார தேரர் தலைமையாக நியமிக்கப்பட்டமைதான் பிரச்சினை என்பதுபோல் காண்பிக்க முயல்கின்றனர்.

அரசாங்கத்தில் இருக்கும் தமிழ் அரசியல்வாதியான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்), "கோட்டாபயவின் முடிவின் பெயரிலேயே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்பொருளை நான் ஊடகங்கள் வாயிலாக விமர்சிக்க முடியாது. அதனுடைய நோக்கம் என்னவென்று உங்களுக்கு தெரியும் தானே. நானும் வர்த்தமானி மூலம் கோட்டாபயவின் முடிவினை பார்த்திருந்தேன். அவர் எந்த நோக்கத்திற்காக இவரை நியமித்தார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆகவே அவரின் நிலைப்பாட்டினை என்னால் விமர்சிக்க முடியாது. என்னுடைய நிலைப்பாடு அரசாங்கத்துடன் சேர்ந்து மக்களுக்கான நியாயத்துடன் சேவை செய்வது. ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை பற்றி கதைப்பதாக இருந்தால் விரிவாக கதைக்க வேண்டும். இது பல விமர்சனங்களை கொண்டு வரலாம் அதனால் நான் கதைக்க விரும்பவில்லை. எனவே இதில் நான் கூறுவதற்கு என்ன இருக்கின்றது" என மழுப்பியிருக்கிறார்.

ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் நாட்டைத் தாரை வார்ப்பதற்கு எதிராகவும், நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதைப்பற்றியும், தங்களுடைய அதிகாரங்கள் பற்றியதுமாக இருக்கிறதே தவிர, நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுடைய நிம்மதி, அவர்களுடைய வாழ்வு சார்ந்ததாக இருக்கவில்லை. இந்த ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியில் தமிழர்கள் இல்லை என்று குறையைக் கூறி அதனை முன்கொண்டு செல்லவே சிலர் முனைகின்றனர்.

பல்வேறு அரசியல் தரப்பினரும் பிரஸ்தாபிக்கின்ற ஒரு விடயமாக மாறியிருக்கின்ற இவ்விடயம், ஏதோ சிறிய கோடு ஒன்றை மறைப்பதற்காகப் போடப்பட்ட பெரிய கோடாகவோ அல்லது மேலும் ஒரு சிறிய கோடாகவோ கொள்ள முடியும்.

கொலைக் குற்றவாளிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படுவதும். அவர்களுக்கு அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்படுவதும் நடைபெறுகின்ற நாட்டில் நீதியை மதிக்காத, சட்டத்துக்கு விரோதமாகச் செயற்பட்டவர் சட்டம் தயாரிப்பதற்கு நியமிக்கப்படுவதில் என்ன புதுமை இருக்கிறது என்று நாம் எல்லோரும் நிம்மதியடைந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

மதத் தலைவர்கள் என்பவர்கள் மக்களுக்கு நீதியை நியாயத்தை, ஆத்மிகத்தைப் போதிக்கின்றவர்களாக இருப்பதே நாட்டுக்குச் சிறப்பானதாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியலையும், அரசையும், சட்டங்களையும் தீர்மானிக்கின்ற வழிநடத்துகின்றவர்களாக பௌத்த பிக்குகள் இருந்து வருகிறார்கள்.

தமிழர்களின் இனப்பிரச்சினை அதனால் வந்த ஆயுத விடுதலைப் போராட்டம் போன்ற காரணங்களைக் காரணம் காட்டி, தமிழ் மக்கள் பயங்கரவாதம் என்ற தோரணையில் தொடர்ந்தும் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.


அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான நோக்கம் ஆட்சிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்ததாக கருத்துகள் பகிரப்பட்டிருந்தன.

அந்தவகையில்தான், ஞானசார தேரரை ஒரே நாடு ஒரே சட்டம் அமைக்கும் குழுவுக்கு தலைவராக நியமித்திருப்பது இனங்களுக்கிடையிலான துருவப்படுத்தலை மோசமான நிலைக்கு இட்டுச்செல்லும் என்ற கருத்து உருவாகியிருக்கிறது.

இலங்கை சிங்கள, தமிழ், முஸ்லிம் என பல்லின மக்களைக் கொண்ட பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவம் என பல மதங்களைப் பின்பற்றுகின்ற, தமிழ் சிங்களம் என பல மொழிகளைப் பேசுகின்ற பல கலாசார பின்பற்றலைக் கொண்டுள்ள நாடாகும். இங்கு, தேசவழமை, முற்குக, கண்டிய, சரியா என பல பிரதேச ரீதியான சட்டங்களையும் கொண்டுள்ள நாடாகும்.

காலங்காலமாக இருந்து வந்த நலைமைகளில் மேலைத்தேயத்தவர்களது வருகையின் காரணமாக உருவான மாற்றங்கள் பின்னர் பல சிக்கல்களை எதிர் கொண்டது. ஆனால் சுதந்திரத்துக்குப்பின்னர் ஆங்கிலேயர்களால் ஒருங்கிணைத்து சிறுபான்மை மக்களின் பாதுக்காப்புக்கான ஏற்பாடுகளுடன் உருவாக்கப்பட்ட சட்டம் இப்போதில்லை. அதனை பெரும்பான்மைத் தேசியம் இல்லாமல் செய்து விட்டது. அதன் பிரதிபலிப்பாக சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றன.

எவ்வாறானாலும் சிறுபான்மை மக்களை பொருட்படுத்தாத அவர்களை அனுசரிக்காத நாட்டின் தலைவருடைய செயற்பாடு பாரதூரமான பிரச்சினைகளையே ஏற்படுத்தும்.



## வாழ்வியல் தரிசனம்

அடுத்தவர் விடயங்களில் சுவாரஷ்யங்களைத் தேடுபவர்கள், தங்களின் பிரதான வேலைகளை மறந்துவிடுகின்றார்கள்.

கடைக்குப் பொருட்களை வாங்கச் செல்பவர்கள், தெருச் சண்டைகளை இரசிப்பதால், வீட்டுக் கருமங்களையே மறந்துவிடுகின்றார்கள்.

பலரது நேரம், வீணாகவே விரயமாகிக் கொண்டிருக்கின்றது. பொழுதுபோக்கு எனும் பெயரில், மனிதன் சோம்பேறியாவதும் உண்டு. கடுமையாக உழைப்பவர்களுக்கே ஓய்வு தேவைப்படுகின்றது.

கடின உழைப்பை நிராகரிப்பது போல் நடப்பது, மகாதவறு. இதனால், கடினஉழைப்பாளிகள் சமூகத்தில் நம்பிக்கை இழந்துவிடுகின்றார்கள்.

குடும்பத்திலும் அக்கறை காட்டாமல், தங்களைச் சுற்றியிருப்பவர்களின் காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள்.

மனித ஆழுமை, அறிவிலும் செயலிலும் தங்கியிருக்கின்றது. சகல உயிர்களும் தமக்கான கருமங்களைச் செய்தபடியே இருக்கின்றன. உலகை மெருகூட்ட கடமையைச் செய்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குமுழமுனையில் மேய்ச்சல் தரவை இல்லை

முல்லைத்தீவு, கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவின் குமுழமுனை கிராம கால்நடை வளர்ப்பாளர்கள், மேய்ச்சல் தரவை நிலங்கள் இல்லாததன் காரணமாக, தமது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளாதாகத் தெரிவிக்கின்றனர்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர், இப்பிரதேசத்தில் 15,000 வரையான கால்நடைகள் காணப்பட்டதாகவும் 2010ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர், தற்போது 4,000 வரையான கால்நடைகளே இப்பிரதேசத்தில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


கரைதுறைபற்று பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் என்பவற்றில் நடைபெறும் கூட்டங்களில், குமுழமுனை கிராமத்திற்கான மேய்ச்சல் தரவைகளை அடையாளப்படுத்துங்கள் எனத் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விடுத்தும் பலன்கள் ஏற்படவில்லை.

வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் போது, மேய்ச்சல் தரவைகளுக்கான நிலங்கள் ஒதுக்கப்படும் என அதிகாரிகள் அளித்த வாக்குறுதிகள், இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக, குமுழமுனை கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக, அடிக்கடி கால்நடைகள் பயிர்ச் செய்கை நிலங்களுக்குள் புகுந்து, அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, வாக்குறுதி அளித்தபடி, மேச்சல் தரவை நிலங்களை தாமதிக்காது ஒதுக்கித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–நடராசா கிருஸ்ணகுமார்





# கல்லறைகள் அழைக்கின்றன...

## நவம்பர் 02ஆம் திகதி, 'சகல ஆன்மாக்கள் திருவிழா'

அருட்பணி. என். தோமஸ் ஸ்ரான்லி

இறந்தவர்களை நினைத்துப் பார்க்கும்விதமாக 'அனைத்து ஆன்மாக்கள் தினம்', 'கல்லறைத் திருநாளை' நாம் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிறாம். இறந்தவர்கள் அனைவரையும் நினைத்து, அவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்னையாகிய திருச்சபை, மோட்சத்திலிருக்கும் தன் மக்களை நினைத்தபின், வேதனைப்படும் தன் மக்களை நினைக்கிறது. அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறது. அவர்களுக்குத் தன்னாலான உதவி செய்ய முயற்சிக்கிறது. மோட்சத்தில் வாழும் தன் மக்களுடன், அவர்களை சீக்கிரம் ஒன்றிக்கும்படி மன்றாடுகிறது.

கல்லறைத் தோட்டங்களில் உயர்ந்தவன் - தாழ்ந்தவன், ஏழை - பணக்காரன், ஆண் - பெண் போன்ற எந்தவிதமான வேறுபாடுகளும் கிடையாது. 'மனிதனின் பிறப்பிலும் சமத்துவம், இறப்பிலும் சமத்துவம். ஏனெனில், இவை இரண்டும் கடவுளின் கையில்! அனைத்து வேறுபாடுகளும் இவை இரண்டுக்கும் இடையில்தான் உள்ளன.

காரணம், அவை உங்கள் கைகளில்தான் இருக்கின்றன. சமத்துவத்தில் பிறந்த நீங்கள், சமத்துவத்தில் இறக்கும் நீங்கள், ஏன் வேறுபாடுகளை ஏற்படுத்துகிறீர்கள்?' என்னும் கேள்வியை எழுப்புகின்றன

கல்லறைகள். முரண்பாடுகளைக் களைந்து வேறுபாடுகளைக் கொண்டாட அழைக்கின்றன கல்லறைகள். சமத்துவ உணர்வுடன் அமைதியுடன் வாழக் கற்றுக்கொடுக்கின்றன கல்லறைகள்.

கல்லறைத் திருநாள். நமது வாழ்வு, இறைவன் நமக்குக் கொடுத்துள்ள மாபெரும் கொடை. மாண்புமிக்க அத்தகைய வாழ்வை நல்லமுறையில் வாழ நினைவூட்டுகின்றன கல்லறைகள்! போராசைகளை அடக்கு. உன் ஆணவத்தை அடக்கு. பணத்திற்கான அதிக தேடலை அடக்கு. வாழ்வை பொருளுள்ள விதத்தில் மாற்று.

தந்தை என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம் (யோவா 6:39)

மனிதனின் கீழ்ப்படியாமையால் இந்த உலகத்தில் துன்பம் நுழைந்தது. துன்பத்தின் கடைசி எல்லையாகிற சாவிலும் நாம் நுழைய வேண்டியதாய் போய்விட்டது. ஒரு மனிதன் செய்த தவறு, ஒட்டுமொத்த உலகத்திற்கே மோசமான ஒன்றாக மாறிவிட்டது.

மனிதனின் இந்த தவறை, கடவுள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஏனென்றால், அவன் அன்பின் நிறைவில் படைக்கப்பட்டிருந்தான். சாத்தானின் சோதனைக்கு எதிராக நிச்சயமாக கிளர்ந்தெழுவான் என்று, கடவுள் உறுதியாக நம்பினார். ஆனால், அது நிறைவேறவில்லை. மனிதன் தவறிழைத்துவிட்டான்.

அதற்காக, கடவுள் மனிதர்களை வெறுத்து ஒதுக்கிவிடவுமில்லை. அவர்களை மீட்பதற்கு புதிய வழியை ஏற்படுத்துகிறார். அவர்களை மீட்பதற்கு மீட்பரை அனுப்புவேன் என்கிற வாக்குறுதியை வழங்குகிறார்.

நம்முடைய வாழ்க்கையில், துன்பங்களால் நாம் துவண்டு போகின்றபோது, கவலை கொள்ள வேண்டாம். ஏனென்றால், இறைவன் நம்மை, துன்பத்திலிருந்தும், துயரத்திலிருந்தும் மீட்பதற்கு திருவுளம் கொண்டிருக்கிறார். நம்மை மீட்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறார். அவர் நிச்சயம் நம்மை விடுவிக்க வருவார் என்கிற நம்பிக்கை உணர்வோடு காத்திருப்போம்.

கல்லறைத் தோட்டத்தில் பல பேர் அமைதியாக இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மண்ணில் புதைக்கப்பட்டிருக்கிற பலபேர், நாம் அறிந்தவர்களாக இருக்கலாம். நமது ஊரில் உள்ள பெரியவர்கள், நமது நெஞ்சுக்கு நெருக்கமானவர்கள், நமது உடன்பிறந்தவர்கள், நாம் அதிகமாக அன்பு செய்தவர்கள் என்று பலதரப்பட்ட மனிதர்கள் இங்கே அமைதியாக இளைப்பாறுகிறார்கள். இவர்களது இறப்பு நமக்கு தரக்கூடிய செய்தி என்ன?

ஏழை, பணக்காரர், நீதியோடு வாழ்கிறவர்; அநீதி செய்கிறவர்; நல்லவர், கெட்டவர் என ஒருவர் எப்படி வாழ்ந்தாலும், என்றாவது ஒருநாள், இந்தப் பயணத்திற்கு ஒரு முடிவு வந்தே தீரும். அந்த முடிவு எப்போது வரும் என்று யாருக்குமே தெரியாது.

இங்கே இருக்கிறவர்களில் யாராவது, நாம் இன்றைக்கு இறந்து விடுவோம் என்று நினைத்திருப்பார்களா? நிச்சயமாக இல்லை. ஒருவேளை அவர்கள் மருத்துவமனையில் கடினமான நோயினால் தாக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தாலும், மருத்துவர்களால் கைவிடப்பட்டிருந்தாலும், ஏதோ ஒரு நம்பிக்கையோடு தான், நாட்களை நகர்த்தியிருப்பார்களே தவிர, இறப்பு இன்னநேரத்தில் வரும் என்று அறிந்திருக்க மாட்டார்கள்.

ஆனால், இறப்பு வந்தே தீரும், அதுதான், இங்கே இந்த கல்லறைத்தோட்டம் நமக்கு கற்றுத்தரக்கூடிய பாடம். இந்த பாடம் நாம் பயப்படுவதற்காக அல்ல, மாறாக, நமது வாழ்வை நல்லமுறையில் வாழ்வதற்காக உதவியாக இருக்க வேண்டும்.

இந்த வாழ்க்கையை எப்போதும் கடவுளுக்கு பிரியமான வகையில் நாம் வாழ்வதற்கு சிரத்தை எடுக்க வேண்டும். எப்போதும் கடவுளின் அருளுக்காக, அவரது ஆசீர்வாதத்தோடு சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக, நாம் வாழ வேண்டும். இறப்பைப் பற்றி கவலை கொள்ளாமல், சிறப்பாக வாழ வேண்டும் என்கிற கவலை, நம்மை சிறப்பாக வாழ தூண்டுகோலாக இருக்கட்டும்.

எளிய இரக்கத்தை வெளிப்படுத்தும் செயல்கள் விண்ணரசிற்கு செல்லும் ஏணிப்படிகள். நாம் செய்கின்ற இரக்கச்செயல்கள் அனைத்தும் நம்மை விண்ணரசில் உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்பவை. எளிமையானவர்களாக, இரக்கமுள்ளவர்களாக, தேவையில் இருக்கிறவர்களுக்கு உதவுகிறவர்களாக வாழும் வரம் வேண்டி இறைவனிடம் மன்றாடுவோம்.

எவ்வாறு இறக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வாறு வாழ வேண்டும். அமைதியாக, நிம்மதியாக, வேதனையின்றி,தனிமையின்றி சாக வேண்டுமென்றால், வாழும்போதும் அவ்வாறே வாழ வேண்டும். வாழ்க்கை எப்படியோ அப்படியே மரணமும். இறைவன் பாராட்ட, மனிதர் புகழ, உன் மனம் பெருமிதமடைய வாழ்ந்துகொள். மரணம் மகிழ்ச்சியாக இருக்கும். புது வாழ்வாக அமையும்.

திருந்தாத பெரும் பாவிகளுக்கு நித்திய நரகமும் முற்றும் பரிசுத்தவான்களுக்கு முடிவில்லாத மோட்சமுமல்லாமல் உத்தரிக்க வேண்டிய ஆத்துமாக்களுக்கு ஓர் நடுஸ்தலமும் இருக்கிறதென்று எக்காலத்தும் எத்தேசத்து மக்களும் விசுவசித்து நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஸ்தலத்திலே உத்தரிப்பு நிமித்தமாக நிற்கும் ஆத்துமாக்கள், மிகுந்த வேதனையை அனுபவிக்கின்றார்கள். எனவே, மக்கள், அவர்களுக்காக வேண்டுதலைச் செய்து, செப தப தான தருமங்களில் ஈடுபடுகின்றார்கள். இதனாலும் வேதனைகள் ஆத்துமாக்களுக்குக் குறையும்.

இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்னர், பண்டைக்காலத்தில் இருந்தே அசீரியரும் பெர்சியரும் எகிப்தியரும் கிரேசியரும் ரோமானியரும் மரித்தவர்களை நினைவுகூர்ந்து நடத்திய அநேக சடங்குகளையும் வேண்டுதல்களையும் பலிகளையும் செலுத்திய ஆதாரங்கள் அகழ்வாராய்ச்சிகளின் போது, கண்டெடுத்துள்ளார்கள். மேலும் பூர்வீக காலத்தில் இருந்து, இந்நாள் மட்டும் அஞ்ஞானிகளாய் இருக்கிற சீன தேசத்தார் மரணத்தை அடைந்த தங்களுடைய முன்னோர்களைக் குறித்து விசேச பயப்பற்றுதலோடு சில திருவிழாக்களைக் கொண்டாடி பற்பல பலி சடங்குகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

இந்துக்கள் செத்தவர்களுடைய ஆத்துமாகள் குறித்து, மோட்ச விளக்கென்ற சடங்கையும், அமாவாசையில் நினைவுகூர்ந்து சில ஆசாரங்களையும் நிறைவேற்றுகிறார்கள்.

இறந்தவர்களுக்காக இந்த திருநாட்களையும் பூசை பலிகளையும் செப தர்மங்களையும் நானாவித சடங்கு ஆசாரங்களையும் சகல மதங்களைச் சேர்ந்த மக்கள் அனுசரித்து வருகிறார்கள் என்றால், 'கட்டிக் கொண்ட பபாவங்களுக்கு ஆக்கினையாக, வேதனைப்படும் ஆன்மாக்களுடைய பாவங்கள் நீங்கி, இந்த ஆத்துமாக்கள் மோட்சத்தை இலகுவில் சென்றடையும் பொருட்டானது என்பதுதான் உண்மை.

சகல கிறிஸ்தவர்கள், மரித்தவர்களுடைய ஆத்துமாக்கள் உத்தரிக்கிற ஸ்தலத்தில் படும் ஆக்கினைகள் குறையும்படிக்கு செப, தப, தான தருமங்களையும், திவ்விய பூசைகளையும் ஒப்புக் கொடுத்து வருகின்றார்கள்.

நரகமும் மோட்சமும் இன்றி நடுஸ்தலமாகிய உத்தரிக்கிற ஸ்தலம் இருக்கிறதென்றும், இதில் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நம்முடைய நற்கிரியையால் ஆறுதல் வருவிக்கக் கூடுமென்றும் ஒத்துக் கொள்ளவேண்டுமே அல்லாமல் வேறொன்றல்ல.

# 'சிறுகக் கட்டி பெருக வாழ்'

## நாளை 31ஆம் திகதி சர்வதேச சிக்கன தினம்

அந்துவன்

மக்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்திடும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி, உலக சிக்கன தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

'சிக்கனம் வீட்டைக் காக்கும்; சேமிப்பு நாட்டைக் காக்கும்' என்ற முதுமொழிக்கேற்ப, ஒவ்வொரு மனிதனும் தனது உழைப்பால் ஈட்டிய செல்வத்தைத் தன் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் பயன்படும் வகையில், சேமிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மக்கள் சிக்கனமாக வாழ்ந்து, தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிக்கும் பழக்கத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டும். எதிர்கால வாழ்க்கை, ஒளிமயமாகத் திகழ்ந்திட பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்குச் சிறு வயதிலிருந்தே சேமிப்பின் அவசியம் குறித்து எடுத்துரைத்து, சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

'சிறு துளி பெரு வெள்ளம்' என்பதற்கேற்ப வாழ்ந்தால், திடீரென பெரும் பணத்தேவை ஏற்படும்போது தடுமாறாமல் அந்தச் சவாலை எதிர்கொள்க முடியும். இவ்வாறில்லையாயின், பலர் கடன் தொல்லைக்கு ஆளாகி உயிரிழக்கின்றனர். இந்த நிலையை தடுக்க ஒரே வழி சேமிப்பு; சிக்கனம்.

பரபரப்பான இந்த உலகில், பணத்தின் தேவை மிக முக்கியமானது. பிறப்பு முதல் இறப்பு வரை நம் வாழ்வின் ஒவ்வொரு நகர்விலும் பணம் பிரதான பங்கு வகிக்கிறது.

1921இல் முதன்முறையாக ஸ்பெய்ன் நாட்டினர், சிக்கன தினத்தைக் கொண்டாடினர். அதன்பின்னர், சிக்கனத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவது, எந்த அளவுக்கு நாட்டிற்கும், உலகமயமாதலுக்கும் முக்கியம் என்பதை அறிந்து ஜெர்மனி, அவுஸ்திரேலியா என, இன்னபிற மேற்கத்தைய நாட்டினரும் இத்தினத்தைக் கொண்டாடினர்.

1924இல் இத்தாலியில் உள்ள மிலன் நகரில் சர்வதேச சேமிப்பு வங்கி பிரதிநிதிகள் பங்கேற்ற மாநாடு நடந்தது. இதில் ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி 'உலக சிக்கன தினம்' கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

ஒவ்வொருவரும், தனது வருமானத்தில் 10 சதவீதத்தை சேமிப்பாக வைத்திருக்க வேண்டும். சம்பளம் வந்தவுடன் இந்த 10 சதவீதத்தை தனியே எடுத்துவைத்துவிட வேண்டும். இதற்கு சிக்கனமான வாழ்க்கை மிகவும் முக்கியமானது. சேமிக்க முடியாதவர்கள் என்று யாருமே கிடையாது. சேமிக்காதவர்கள் சிரமப்படுவார்கள்.

சேமிப்பைப் பொறுத்தவரை, எல்லாக் குடும்பங்களும் அதில் ஈடுபட வேண்டும். மிக ஏழ்மை நிலையில் இருப்பவர்கள் தொடங்கி, பணக்காரர்கள் வரை, வாழ்வில் முன்னேற வேண்டுமென்றால் சேமித்துத்தான் ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தனது தேவையை, தனது சம்பாத்தியத்தை விடக் குறைவாகவே வைத்திருக்க வேண்டும்.

ஒருவர், தான் வேலையில் சேர்ந்ததில் இருந்து, திருமணம் வரையில் மிகச் சிறப்பாகச் சேமிக்க முடியும். அந்தக் காலகட்டத்தில், தனது வருவாயில் குறைந்தது 50 சதவீதத்தையாவது சேமிக்க முடியும். அதைச் செய்துதான் ஆக வேண்டும்.

சேமிப்புகளில் பல வகை இருக்கிறது. நம்முடைய சேமிப்பைச் சிறிய உண்டியலில் பணத்தைச் சேர்ப்பதிலிருந்தே தொடங்கலாம். கையில் வரும் சில்லறைக் காசுகளை, சிறிய அளவிலான தொகையைத் தொடர்ந்து, அந்த உண்டியலில் போட்டுவரலாம்.

நவீன பொருளாதாரமுறை, நம்மிடையே சிக்கனத்துக்கான எண்ணத்தையும் சேமிப்புக்கான அறிவையும் தூண்டுகிறது. சிக்கனமாய் இருத்தல் என்பதற்கு உணவு உண்ணாமல், தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளாமல் இருப்பது என்பது பொருள் அல்ல. அவசிய, அத்தியாவசியத் தேவைகளைத் தாண்டி, மீதியைச் சேமித்து வைத்தல்தான் சிக்கனம்.

நிறையப் பேர், சிக்கனம், கஞ்சத்தனம் இரண்டையும் ஒன்றாகப் பார்க்கின்றனர். அது தவறு; நம் வீட்டின் உணவுத்தேவைக்கு ஏற்ப சமைத்து, உணவை வீணாக்காமல் உண்ணுவதாக வைத்துக்கொள்வோம்; இது சிக்கனம். சேமிக்க வேண்டும் என்பதற்காக, அன்றாட உணவின் அளவைக் குறைத்துக் கொள்வது கஞ்சத்தனம். இரண்டுமே வெவ்வேறாகும்.

சேமிப்பும் சிக்கனமும் சரி சமமாக இருந்தால், பொருளாதார சமநிலையில் ஏற்றம் ஏற்படும். பொருளாதார ரீதியாக ஒரு நாட்டின் முன்னேற்றம், தனி மனித சேமிப்பை மையமாகக் கொண்டதுதான்.

'சிக்கனம் வீட்டையும் சேமிப்பு, நாட்டையும் காக்கும்'. பெரிய அளவு பணத்தைச் சேமிப்பது மட்டுமே சேமிப்பு அல்ல! நம்மால் முடிந்தவரை ஒரு ரூபாய் கூட சேமித்து வைக்கலாம்.

எப்படி மலர்களில் இருந்து தேனை உறிஞ்சும் தேனீக்கள், அதை வைத்து ஓர் இனிய தேன்கூடைக் கட்டுகிறதோ அதைப்போலத்தான், சிறுதுளி பெருவெள்ளம் என்பது கூட!

ஆடம்பரமான வாழ்க்கையை தவிர்த்து, யதார்த்த வாழ்வையும் சிக்கனம் நமக்கு கற்றுத்தருகிறது. இதன்மூலம் எந்த சூழலிலும் நாம் வாழ்க்கையை நகர்த்திச் செல்லலாம். அடுத்தவரைப் போல தானும் வாழ வேண்டும் என்ற உணர்வு சிலநேரங்களில், நம்மை தவறான வழிகளுக்குத்தான் இட்டுச்செல்லும்.

இந்த நவீன காலகட்டத்தில், பணத்துக்குப் பதிலாக கிரடிட் கார்டை பலர் பயன்படுத்துகின்றனர். இது அவசியம்தான். ஆனால், வரைமுறையின்றி அதில் செலவழித்து விட்டு, கட்ட முடியாமல், வட்டி கட்டி பலர் பரிதவிக்கின்றனர். கிரடிட் கார்ட் இருந்தாலும் சிக்கனமான பயன்பாட்டு முறை மிகவும் முக்கியம்.

பணம் மட்டுமல்ல, தண்ணீர், மின்சாரம் இப்படி நம் அன்றாட வாழ்வுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். அது நமக்காக மட்டுமல்ல; நமது வருங்கால சந்ததிக்கும்தான் என்பதை உணர வேண்டும். ஆகையால், இக்கணமும் எக்கணமும் சிக்கனம் அவசியம் என உணர வேண்டும்.

'சிறுக கட்டி பெருக வாழ்' என்ற பழமொழிக்கு ஏற்ப, சேமிப்புப் பழக்கத்தை குழந்தைகளுக்கும் சொல்லி கொடுக்கும் நோக்கில் அமைந்ததே நம் முன்னோர் கூறி வைத்த பொன்மொழியாகும்.

வாழ்வில் எப்பொழுதுமே சிக்கனத்தை முதன்மையானதாக வைத்திருக்க வேண்டும். நம் சிக்கனம், உலகத்தின் ஆயுட்காலத்தை அதிகரிக்கும்.



திருகோணமலையில்



# பால் உற்பத்தி பாதிப்பு



அ. அச்சுதன்

பால் உற்பத்தி பண்ணை என்பது, சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் வருமானம் ஈட்டக்கூடிய, ஒரு முக்கிய உப தொழிலாகும். கால்நடைகளினால் கிடைக்கும் எரு, உரம் மூலம் இயற்கை உரம் தயாரிக்கவும் மண்ணை வளப்படுத்தவும் பயிர்கள் நன்கு வளரவும் சாண எரிவாயு, மட்டுமன்றி, கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு எரிபொருளாகவும் பயன்படுகிறது.

ஆரம்பத்திலிருந்தே வேளாண்மை சார் தொழில்களில் பெரும்பாலான வேலைவாய்ப்பும் இலாபம் ஈட்டக்கூடிய தொழிலாகவும் பாற்பண்ணை அமைகிறது. பாற்பண்ணை வருடம் முழுவதும் வருமானம் ஈட்டக்கூடிய ஒரு தொழில் முயற்சியாகும்.

இருப்பினும், இலங்கையின் பால் உற்பத்தி கைத்தொழில், இன்னும் வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகக் காணப்படுவதுடன், கேள்வியை ஈடுசெய்யும் அளவிற்கு, வழங்கல் இன்னும் முழுமையான அளவில் கிடைப்பதில்லை. உள்நாட்டுப் பால் உற்பத்தி, மொத்த பால் தேவையில் 17 சதவீதத்தை மட்டுமே நிவர்த்தி செய்கின்ற அதேவேளை, மிகுதி இறக்குமதி செய்யப்படுகின்றது.

தற்போது இறக்குமதி, அரசாங்கத்தால் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் சில ஆண்டுகளில், பால் உற்பத்தில் தன்னிறைவு பெற்றதாக, இலங்கை மாற்றுவதே கால்நடை வள மற்றும் கிராம அபிவிரத்தி அமைச்சின் நோக்கமாக உள்ளது.

கடந்தகால யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில், கிராமங்களில் அதிகமான வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு பசு மாடுகள் காணப்பட்ட போதிலும், சந்தைவாய்ப்பு பற்றிய தெளிவின்மை காரணமாக, அவர்கள் பால் கறப்பது குறைவு. ஆனால், திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பாக, திருகோணமலை நகர் பகுதியில் தூய பசும்பாலுக்கான தேவை அதிகளவில் காணப்படுகின்றது.

இந்தநிலையில், இத்துறையில் ஈடுபடுகின்றவர்கள் மிக குறைவாகவே உள்ளனர். இதனை அறிந்து, முதற்கட்டமாக டி. இரவிகாந்தன் என்பவரால், 2012 ஆம் ஆண்டில் இருந்து, கும்புறுபிட்டியிலிருந்து நிலாவெளி, பெரியகுளம் வரையிலான கிராமங்களில், சிறிய அளவில் பால் உற்பத்தி செய்பவர்களிடம் இருந்து, தூய பசும்பாலைக் கொள்வனவு செய்து, திருகோணமலை நகரப் பகுதியிற்கு கொண்டு சென்று விற்பனை செய்ய ஆரம்பித்தார்.

படிப்படியாக கொள்வனவு செய்யப்பட்ட பாலின் அளவும் அதிகரித்துச் சென்றதோடு, அவர்வளப்பற்றாக்குறை தொடர்பான சவால்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இதற்காக அவர், பகுதி நேர வேலையாளர்களைத் தொழிலுக்கு அமர்த்தி, காலையும் மாலையும் வாடிக்கையாளர்களுக்கான பசும்பால் விநியோகத்தை மேற்கொண்டிருந்தார். சேகரிக்கப்படும் பாலைப் பழுதுபடாமல் பாதுகாக்க வேண்டிய நிலை, பெரும் சவாலாகக் காணப்பட்டது.

எனவே, இத்தொழில் முயற்சியின் விரிவாக்கத்தின் அடுத்த கட்டமாக, 500 லிற்றர் கொள்ளளவுடைய இயத்திரத்தை கொள்வனவு செய்து, தினமும் சேகரிக்கப்படும் பால் குளிரூட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டது. இதற்காக,





மக்கள் வங்கி கடனுதவி வழங்கியிருந்தமை, தனது முன்னேற்றத்துக்கான படிக்கல்லாக அமைந்திருந்தது என, இரவிகாந்தன் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்.

இவர் தொழிலைத் தொடங்கிய முதல் மாதத்தில், 300 லீட்டராக கொள்வனவு செய்து விற்பனை செய்யப்பட்ட அவரது வியாபாரம், கடந்த ஆறு ஆண்டுகால வளர்ச்சியில் 3,000 - 4,000 லீட்டர் வரை உயர் வளர்ச்சியை எட்டியுள்ளது.

இவ்வாறன நிலையில்தான், இவ்வருடம் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக, அவரது தொழில் மாத்திரமன்றி பாற்பண்ணையாளர்கள், அதனுடன் தொடர்புபட்ட உற்பத்திகளை செய்யும் அனைவரும், மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு நாளைக்கு 250 லீட்டர் முதல் 300 லீட்டர் பாலைக் கொள்வனவு செய்த அவர், தற்போது 35 லீட்டர் முதல் 50 லீட்டர் பாலையே கொள்வனவு செய்ய முடிகிறது. இப்பாலானது, அவரது வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்திசெய்ய முடியாமல் மிகுந்த சிரமப்படுகின்றார்.

இவரது வாடிக்கையாளர்களை எடுத்துக்கொண்டால், அதிகமானவர்கள் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் கணவன் - மனைவி இருவரும் வேலைக்கு செல்பவர்களாக காணப்படுகின்றனர்.

இவர்களின், காலைநேர வேலைப்பளுக்களுக்கு இடையிலும், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் அவசரத்திலும் காலை உணவை எடுத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது.

இச்சந்தர்ப்பத்தில், இவர் அதிகாலை நான்கு மணி தொடக்கம் வீடுகளுக்கு சென்று பாலை விநியோகம் செய்வதினூடாக, அவர்களுக்கான காலை ஆகாரமாக, நிறை உணவான பாலைப் பெற்றுக்கொள்வதற்க்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அதனூடாக அவர் வருமானத்தையும் பெற்றுக் கொள்கின்றார்.

அத்துடன் திருகோணமலையிலுள்ள ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும் இந்துக் கோவில்களுக்கான அபிஷேகம், பொங்கல் தேவைகளுக்கும் பாலை வழங்கி வருகின்றார் என்பதும் முக்கியமான விடயமாகும்.

அத்துடன், பால் மேலதிகமாகக் கிடைக்கும் போது, பால் டொபி, தயிர், நெய் போன்ற உப உற்பத்திப் பொருட்களையும் செய்து விற்பனை செய்து வருகின்றார். இதனால் விசேட வைபவங்களின் போது கிடைக்கப் பெறும் வாடிக்கையாளர்களின் ஓடர்களையும் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றார்

இவருடைய இத் தொழில் முயற்சிக்கு, அவரது குடும்ப அங்கத்தவர்கள் ஆதரவாக உள்ளமை அவருக்கு ஒரு பெரிய பலமாக உள்ளது. இதன் காரணமாகத் தனது வர்த்தக நாமமானது 'சக்தி பால்' என்று மிகவும் பிரபல்யமாக திருகோணமலையில் விளங்குகின்றது.

இது இவ்வாறிருக்கையில், தற்போதைய வரட்சியுடன் கூடிய வானிலை காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் பாலின் உற்பத்தி மிகவும் குறைவடைந்து செல்கிறது. இதனால் பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள் பால் கறப்பதை நிறுத்தி விட்டார்கள்.

தற்போது, போதியளவு பால் உற்பத்தியின்மையால் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. இலங்கையில் அதிகளவான பால் உற்பத்தியை மேற்கொள்ளவேண்டிய தேவை மற்றும் 2023ஆம் ஆண்டுக்கிடையில் பால் உற்பத்தியில் தன்னிறைவடைய வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் அளவைக் குறைக்கவேண்டும் எனவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில், பால் உற்பத்தியை அதிகரிப்பதனூடாக ஒரு நிரந்தரமான தொழிலைத் தொடரமுடியும் என்ற நம்பிக்கையில், 'ஒருங்கிணைந்த பாற்பண்ணைத் திட்டம்' ஒன்றினை ஆரம்பிப்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளார்.

இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்க்காக அதனுடன் தொடர்புடைய பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன், அதற்கான நிதி ஆதாரத்தைத் தொழிற்துறை அபிவிருத்தி சபையின் வழிகாட்டலுடன் மக்கள் வங்கியில் கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளார்.

எனவேதான், இத்திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்யும் நோக்கத்தில், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரியகுளம் கிராமத்தில், ஒருங்கிணைந்த பாற்பண்ணை ஒன்றை ஐந்து ஏக்கர் காணிப் பரப்பில் அமைப்பதற்காத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பூரணமாகச் செயற்படும் பட்சத்தில், இவருடைய முயற்சி பாராட்டத்தக்கது.

இந்த நிலையில், திருகோணமலையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு கால் நடைகளின் மேச்சல் தரவைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்பகுதிகளில் பயிர் செய்கை இடங்களாக மாற்றப்படுவதை தடுக்க வேண்டும். கால் நடைகளைப் பராமரிப்பது தொடர்பான, பயிற்சிகள் கடன் உதவிகள் போன்றவற்றை அரசாங்கத்தால் வழங்க வேண்டும் என்பது இத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.



## இரணைதீவின் இன்னல்கள்:

# கடைக்கண் பாரீரோ!



சுப்ரமணியம் பாஸ்கரன்





கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் இரணைதீவு, கடல் வளம் கொண்ட பிரதேசமாகவும் இயற்கையாகவே வாழ்வாதர வளங்கள் நிறைந்த இடமாகவும் காணப்படுகின்றது.

இத்தீவில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள், கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல், மீள்குடியேறி வாழ்ந்து வருகின்ற நிலையில், குறித்த பிரதேசத்தில் வாழ்வாதார வழிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படாத நிலைமை தொடர்ந்து நீடித்துவருகின்றது.

இதனால், இத்தீவில் வாழும் மக்கள் தொடர்ந்தும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக தெரிவிகின்றார்கள். இரணைதீவில் அடிப்படை வசதிகளின்மைக்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன.

அதாவது, இறுதியாகக் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட ஒரு பகுதி இத்தீவு என்பதால், இந்த நெருக்கடி நிலைமை காணப்படலாம். இந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கு, இன்னும் சிறிது காலம் எடுக்கலாம் என்பது வேறுகதை.

குறிப்பிட்ட சில அபிவிருத்தி வேலைகள், முன்னெடுக்கப் பட்டு வருகின்றன என, விடயதானங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் மறுமொழியாகக் காணப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், இலங்கையின் வடக்கே உள்ள தீவுகளில் ஏற்பட்ட யுத்த நெருக்கடிகள், பொருளாதாரத் தடை என்பவற்றால், அங்கிருந்த மக்கள் இடம் பெயர்ந்த சந்தர்ப்பத்தில், இரணைதீவில் வாழ்ந்த 240 வரையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து, முழங்காவில் பகுதியில் தற்காலிகமாகக் குடியேறினர். அந்தப் பிரதேசம், தற்போது 'இரணை மாதா நகர்' என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே, இரணைதீவில் இயங்கிய இரணைதீவு பாடசாலை, தபால் நிலையம், கிராம அலுவலர் அலுவலகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பன இன்றும் இரணை மாதா நகரிலேயே இயங்கி வருகின்றன.

இரணைதீவில், நூற்றாண்டுகள் பழைமையான, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் சமுதாயம் இருந்துள்ளது. இதற்குத் தக்கசான்றாக, 1900 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலை, பழைமையான கட்டட இடிபாடுகளுடன் இன்றும் காணப்படுகின்றது.

'இரணைதீவு' என்று பெயர் வரக் காரணம், இரண்டு தீவுகள் காணப்படுவதால் ஆகும் என்று சொல்லப்படுகிறது. அதாவது, பெரிய தீவு, சிறுதீவு என்ற இரு தீவுகள் காணப் படுகின்றன.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில், சிறிய தீவில் 50 குடும்பங்களும் பெரிய தீவில் 190 குடும்பங்களும் வாழ்ந்ததாக, அந்த மக்களின் பதிவுகள், ஆவணங்கள் ஊடாக அறிய முடிகின்றது.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர், தங்களுடைய சொந்த நிலத்தில் குடியமர வேண்டும் என்று கோரிக்கைகளை முன் வைத்த போதும், 2017 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியே அது சாத்தியமானது.

மீள்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்தும் வகையில், ஓரளவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, கடற்றொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. தங்களால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலும் வீடுகளிலும், வாழ்வதைக் காணமுடிகின்றது.

இருந்தபோதும், தாங்கள் தற்காலிகமாக அமைத்த கூடாரங்களிலேயே இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கான கடற்போக்குவரத்து பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

அதாவது, இரணை தீவிலிருந்து இரணைமாதா நகருக்குச் செல்வதற்கும் இரணைமாதா நகரில் இருந்து தீவுக்குச் செல்வதற்கும், மீன்பிடி படகுகளில் ஏறிப் பயணிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில் 70க்கு மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அட்டை வளர்ப்பு தொழில், கடற்பாசி வளர்ப்பு என பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களும் மீன்பிடி படகில் பயணிப்பது அல்லது, இவர்கள் போக்குவரத்துச் செய்வதற்கு பாரிய பிரச்சினை எதிர்நோக்கப்படுகிறது.

கடல் மார்க்க பொதுப் போக்குவரத்து சேவை இன்மையால், இந்த மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, மீனவர்களின் மீன்பிடி வள்ளங்களிலேயே போக்குவரத்து செய்து வருகின்ற நிலைமையால், தங்களுடைய எந்த அடிப்படைத் தேவையாக இருந்தாலும் சரி, மீன்பிடி படகுகளிலேயே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இலங்கையின் வட பகுதியில் இருக்கின்ற ஏனைய தீவுகளுக்கும், பொதுப் போக்குவரத்து நெருக்கடிகள் காணப்பட்டாலும், தினமும் குறிப்பிட்ட நேரங்களில் பொதுப் போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. ஆனால், இரணைதீவுக்கு எந்த விதமான போக்குவரத்து வசதிகளும் இல்லை.

இதைவிட, இங்கு வித்தியாசமான ஒரு பிரச்சினை காணப்படுகின்றது. 1990இற்கு முன்னர் வாழ்ந்த மக்கள், கடற்றொழில் என்பதற்கு அப்பால், கால்நடை வளர்ப்பு, தோட்ட பயிர்செய்கை என்பவற்றையும் மேற்கொண்டிருந்தார்கள்.

அந்தந்தப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயரும் போது, தங்களுடைய வாழ்வாதாரத்துக்கா ஆதாரமாக வளர்க்கப்பட்ட கால்நடைகளை, அந்தந்தப் பிரதேசங்களிலே விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இதனால், அங்கே ஏராளமான கால்நடைகள் காணப்படுகின்றன. இந்த நிலையில், குறித்த பிரதேசத்தில் அதிகமான கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் அதிகளவில் காணப்படுகின்றது.

அதாவது, பொது மக்களால் பராமரிக்கப் பட்ட கால்நடைகளின் இளங்கன்றுகளை, அங்கே இருக்கின்ற கட்டாக்காலி நாய்கள் உணவாக உட்கொண்டு வருகின்றன.

கிட்டத்தட்ட அந்த பிரதேசத்தில் 15க்கும் மேற்பட்ட இளங்கன்றுகள் இவ்வாறு கட்டாக்காலி நாய்களால் கொல்லப்பட்டுள்ளதாக இப்பிரதேசத்தை சேர்ந்த எமிலியாம் பிள்ளை தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு பல்வேறுபட்ட நெருக்கடிகள், இந்த இரணைதீவு என்ற அழகிய கிராமத்தில் காணப்படுகின்றது. இந்த மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இங்கே இருக்கின்ற கால்நடைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அங்கேயுள்ள கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது இந்த மக்களின் முறைப்பாடுகளாகும்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 30 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.